www.tamilarangam.net

குமுறல் 5
அனல் 1
1989

# எரிமலை

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE ; FRANCE




**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net





## பூபதி அம்மாவுக்கு ......

பூபதி அம்மாவுக்கு ......
இது நினைவுகளின் அலங்காரம் அல்ல
உறுதிகளின்
உருவாக்கம்!
நமக்குள் நாமே
செய்து கொள்கின்ற இரகசிக வதை!
அம்மா! தமிழீழத் தாம் பெற்ற தாயே!
நீ..... போய்விட்டாய்
உன் பூவிழிகளை ஏனோ மூடிக்கொண்டாய்!
ஆனாலும்,
இங்கு பல விழிகள் விழித்துக்கொண்டன!
உன் அஸ்தமனத்தின்போது
புதிய புலர்வுக்கான
அடிக்கல் நாட்டப்பட்டது!
தாயே! நீ கொஞ்சம் ஓய்வெடுத்துக்கொள்!
அப்படியே கொஞ்சம்
அயர்ந்து தூங்கு!.
எமது மண்ணின் தேசிய கீதம்
உனக்குத் தாலாட்டுப் பாடட்டும்!



www.tamilarangam.net



# ஆசிரியர் கருத்து

தமிழீழத்தில், எமது மண்ணில் அன்னிய ஆக்கிரமிப்பு இராணுவத்தினரின் துப்பாக்கி மிரட்டல்களுக்கும், சமூகவிரோதிகளின் பயமுறுத்தலுக்கும் மத்தியில் எமது பூமியில், அன்னிய அரசு ஜனநாயகத் தேர்தல் இரண்டை நடத்தி முடித்திருக்கின்றது.

தமிழீழத்திலுள்ள 8 மாவட்டங்களில் 3 மாவட்டங்களில் மாத்திரம் "தேர்தல்" நடத்தி வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கான முதலமைச்சரை இந்திய அரசு தெரிவு செய்தது. இந்தியா தனது பிராந்திய நலன்களுக்காக எடுக்கின்ற சகல நடவடிக்கைகளுக்கும் பச்சைக்கொடி காட்டுகின்ற, சுயமான எண்ணங்களோ, சுயமான உணர்வுகளோ, சுயமான செயல்பாடுகளோ அற்ற ஒருபொம்மை அரசு-நிறுவிக்கொண்டதன் மூலம் தனக்கு சாதகமானசூழ்நிலையை உருவாக்க முனைந்தது.

தமிழீழத்திலும், இந்தியாவிலும், சர்வதேச அரங்குகளிலும் இந்திய ஆக்கிரமிப்பிக்கும், அராஜகத்திற்கும் எதிரான குரல்கள் வலுவடைந்து வருகின்ற வேளை, தங்களின் குருதிக்கரங்களை உயர்த்திப்பிடிக்க கைக்கூலிக்குழுக்களை ஆட்சிக் கட்டிலில் அமர்த்திக் கொண்டனர்.

அமைதி வேண்டியும், உண்மையான ஜனநாயகம் வேண்டியுமே தாம் செயல்படுவதாக உலகிற்கு காட்டுவதற்காக பாராளுமன்றத் தேர்தல் என்ற பெயரில் மீண்டும் ஓர் துப்பாக்கி முனைத் தேர்தல் இந்திய இராணுவத்தினரால் வலு கச்சிதமாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.

*E.P.R.L.F, T.E.L.O, E.N.D.L.F* காடையர் கூட்டு முன்னனி *T.U.L.F* துரோகக் கூட்டணியுடன் இணைந்து உதய சூரியன் என்னும் சின்னத்தின் கீழ் தமிழீழ மக்களின் சொரனை கெட்ட தன்மையை சோதித்துப் பார்க்க, இந்திய அதிகாரவட்டத்தின் மேற்பார்வையுடன் கூட்டுச் சேர்ந்து போட்டியிட்டனர்.

தமிழ்க்காங்கிரஸ், *E.R.O.S* என்பனவும் இத்தேர்தல்களத்தில் போட்டியிட்டுக் கொண்டன!! இத்தேர்தல் மூலம் தமிழ் மக்களிற்கு எத்தவிதமான நன்மையும் ஏற்படப் போவதில்லை. தமிழீழ தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டத்தின் - திசையை மாற்றுவதற்காக திட்டமிட்டு மேற்கொள்ளப்படு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கின்ற இத்தேர்தல் நாடகத்தை தமிழீழ மக்கள் அனைவரும் பகிஸ்கரிக்க வேண்டும்" என விடுதலைப் புலிகள் அறிக்கை வாயிலாக மக்களைக் கேட்டுக் கொண்டனர்.

தமிழீழ விடுதலை, ஈழ விடுதலை என்றெல்லாம் மக்களை ஏமாற்றி, பல மக்களின் உயிர்தியாகங்களுக்கு, பொருட்சேதங்களுக்கு மத்தியில் தம்மை வளர்த்துக்கொண்டனர். கள் இனவாத சிறிலங்கா அரசின் தேர்தலில் போட்டியிட்டு இனவாதப் பாராளுமன்றத்தில் "பிரிவினையைக் கைவிட்டுவிட்டோம் நாட்டின் ஒற்றுமைக்காகவும் வளர்ச்சிக்காகவும் பாடுபடுவோம்" என்று சத்தியப்பிரமாணம்செய்து பாராளுமன்ற நாற்காலிகளில் வீற்றிருப்பதற்காகஇந்த சொகுசான சொந்த வாழ்க்கையை ஏற்படுத்துவதற்காக பல பசப்பு வார்த்தைகளை அள்ளியிறைத்தனர்.

எனினும் விடுதலைப் புலிகளின் வேண்டுகோளை ஏற்று ஏராளமான மக்கள் தேர்தலைப் புறக்கணித்தனர். ஒரு பகுதி மக்கள் குண்டர்படைகளால் வலுக்கட்டாயமாகவாக் களிக்கவைக்கப்பட்டனர். வாக்களிக்க மறுத்த மக்கள் கொலைசெய்யப்பட்டனர், அடித்து சித்திரவதை செய்யப் பட்டனர்.

கட்டாயப் படுத்தப்பட்டு வாக்களிக்க வைக்கப்பட்ட மக்கள் EROS குழுவினருக்கு (இவர்கள் விடுதலைப்புலிகளின் ஆதரவுடனேயே தேர்தலில் நிற்கின்றனர் என்ற கருத்து பரவியிருந்தது) வாக்களித்தனர்.

இந்தியக் கைக்கூலிகளுக்கு கிடைத்த வாக்குகள் அன்னிய நாட்டுப் பிரஜைகளாலும் கைக்கூலிகளின் கள்ள வாக்குகளினுமே தீர்மானிக்கப்பட்டுள்ளன எனபது இங்குமுக்கியமாக கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டியதொன்றாகும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்கு சுமாரானமக்கள் ஆதரவு உண்டென நம்பிய இந்திய அதிகார வர்க்கம் இத் தேர்தலின் மூலம் கூட்டணித் தலைமையினை பதவிக்குகொண்டுவந்து ஏற்கனவே தம்மால் பதவிக்கு வந்துள்ள மாகாண சபை பொம்மையாட்சிகளுடன் நிரந்தர உறவைஏற்படுத்தி தம்மை எச்சந்தர்ப்பத்திலும் மீறாத ஓர் அடிமை ஆட்சியை தமிழீழத்தில் ஏற்படுத்த முயன்றனர்.

எனினும் இத் தேர்தல் மூலம் இந்திய அதிகாரவட்டத்திற்கும் இந்திய-இலங்கை ஒப்பந்தத்திற்கு பாரிய அடியை தமிழீழ மக்கள் கொடுத்துவிட்டனர். 90% மான மக்கள் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை எதிர்க்கின்றார்கள் என்பதை இத் தேர்தல் முடிவுகள் தெட்டத்தெளிவாக காட்டியுள்ளன.

www.tamilarangam.net



தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்கள் ஆதரவு எவ்வளவு என்பதை இராணுவ முற்றுகைக்குள்ளும் மக்கள் நிரூபித்துக் காட்டியுள்ளனர்.

இத்தேர்தலில் போட்டியிட்டு "வெற்றி" பெற்ற EROS குழுவினர் தேர்தல் பிரச்சாரத்தின் போது "அதிகாரத்தில் உள்ளவர்களின் (வடக்கு-கிழக்கு) பயங்கரவாதிகளினால் எங்களது தோழர்கள் கொலைசெய்யப்படுகின்றார்கள், சித்திரவதை செய்யப்படுகின்றார்கள்; இவற்றில் இருந்து தப்பித்துக் கொள்வதானால் மக்களின் அதிகாரம் பெற்ற ஓர் இயக்கமாக எம்மை நாம் நிரூபித்துக் காட்ட வேண்டும்" என்று கூறியிருந்த போதும், தேர்தலுக்கு முன்னும் தேர்தலில் வெற்றியீட்டிய பின்பும் EROS உறுப்பினர்கள் பலர் EPRLF இனரால் கொலைசெய்யப்பட்டிருக்கிறார்கள். அதாவது இறுதியாக நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் வெற்றியீட்டியவர்கள், மாகாணசபை தேர்தலில் வெற்றியீட்டியவர்களால் (?) கொலைசெய்யப்பட்டுள்ளார்கள். (இதில் இருந்து இந்திய ஜனநாயகம் என்பது அங்கீகரிக்கப்பட்ட? கொலைஞர்களின் களம் என அர்த்தப்படுகின்றது.) ஆகவே இந்தியாவினால் நடத்தப்பட்ட போலி ஜனநாயகத்தேர்தல் மூலம் தம்மையே காப்பாற்றிக் கொள்ள முடியாத நிலையில்தான் EROS குழுவினர் இருக்கின்றனர்.

எனவேதான் அடக்கி ஆளும் எண்ணம் கொண்ட இந்திய தர்பாரின் கீழ் அடங்கி வாழும் ஜனநாயகம் எம்மைஓர் அமைதி வாழ்க்கைக்கு இட்டுச் செல்லும் என்றும் யாரும் எண்ண வேண்டியதில்லை.

ஆயிரக்கணக்கான இளைஞர்களினதும் யுவதிகளினதும் தியாகவடுக்களை வருடிப்பார்த்தே பயனப்படும் எமது தேசிய விடுதலைப் போராட்டம் பல ஆயிரம் அப்பாவிப் பொது மக்களின் தியாகங்களுக்கு துரோகம் செய்கின்றவிதத்திலே அமைதல் கூடாது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் பரிசுத்தமான தலைமையின்கீழ் வழிநடத்தப்படுகின்ற நமது தேசியவிடுதலைப்பயணத்தில் தங்குமடம் தேவையில்லை. எமக்கு ஓர் அமைதியான வாழ்வு உண்டென்றால் அது தமிழீழத்தில்தான். அந்த ஒளிமயமான எதிர்காலத்திற்காக நாம் அனைவரும் கரங்களை ஒன்றிணைப்போம். கருத்தினில் ஒன்றிணைவோம்.

***

— ஆசிரியர் குழு —

www.tamilarangam.net



# நான் தொலைத்த சூரியனை தேடுகின்றேன்

ஆயிரம் கூட்டமாய் வண்ண
மலர்ச் சரங்களாய் மிதந்திட்ட
வண்ணத்துப் பூச்சிகளை
வயல் வெளியில் விரெட்டிச் சென்றதும்,

அழகிய எம்கடற் கரையில்
குழி விட்டு வெளிவந்த நண்டுகளை
துரத்திப் பிடிக்கையில்
கால் சறுக்கி அலையில் விழுந்ததும்

சின்னஞ்சிறு குருவிகளின்
பொட்டிட்ட முட்டைகளை
பார்த்திட்டு பக்குவமாய்
கூட்டினுள் வைத்ததும்,

குழை வெட்டிய கிளைகளில்
சூரிய நிறம் பூசி
குந்தியிருக்கும் தும்பிகளை
மயிர்த் தட்த்தால் பிடித்ததும்

சுவரோரச் சிறு மணல் குழிகளில்
குழு மாட்டுக் குஞ்சுகளைத்தேடி
விரல்களால் மண்ணளைந்து
துளாவிப் பார்த்ததும்,

குயிலாய்க் கத்தும் மாமரங்களை
அணில் ஏறி விளையாடும்
முள் முருக்க மரங்களை
கவணோடு தேடி அலைந்ததும்,

நடுங்கும் காலைப் போதில்
இள வெயிலுக் கொளித்திட்ட
வெண்பனி துரைகளை
இலைகளின் கீழ் தேடியதும்,

www.tamilarangam.net



கொட்டும் மழையில்
வேறுமென்று நனைந்ததும்
வெயிலோடு மழைபெய்ய
குடை கவிழ்த்துத் துள்ளியதும்,

நிறக் கோடுகள் கீறிய
ஆயிரங்கால் அட்டைகளை
சுமை ஏற்றித் தள்ளாடும்
நத்தைகளைச் சுருள வைத்து மகிழ்ந்ததும்,

பருவ உணர்வின் வேகத்தில்
தெருவோரக் கடைகளில்
ஒரு கணப் பார்வைக்காய்
பல மணி நேரம் மினக்கட்டதும்,

ஒளி மின்னும் வெள்ளிப் பனித்துளிகள்
துளிர்த்திருக்கும் பச்சைப் புல்லினிடை
சிந்திய ரத்தத் துளிகளாய்க் கிடக்கின்ற
தம்பளப் பூச்சிகளை தடவிப் பார்த்ததும்,

நினைவில் மட்டும் நிலைத்திருக்க
எம்மண்ணைப் பிரிந்து
அந்நியம் ஆனபோது
வாழ்க்கையைத் தொலைத்துவிட்டேன்.

பனைமரக் கறுப்பினூடு
எம் மண்ணில் எழுகின்ற
எனது சூரியனைத் தேடுகின்றேன்
ஏழு வண்ணங்களுக்காக ஏங்குகின்றேன்

– மதி –

ooooo ooooo

( 17 ம் பக்கத் தொடர்ச்சி )

தொடர்ந்திடும் மரணங்கள் துலக்கிடும் விடுதலைப் – பாதையை என்பதில் அசையாத நம்பிக்கையும் உறுதியும் கொண்டு வீரமரணத்தை தழுவிக்கொண்ட எங்கள் தோழி மாலதியின் தோழமை நினைவுகள்

என்றும்

எம்முடன்

பசுமையாய் . . . . . . .

(நன்றி—உணர்வு)

www.tamilarangam.net



# விரக்தி! ஆறுதல்....

* * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * *

"இது எமது தேசம்
இது எங்களுக்கே உரிமையானது
இங்கு வசிப்பது எமது உரிமை
இங்கு எமக்கு பாதுகாப்பு தேவையில்லை"

—மறைந்த எம் தேச தலைவர்கள் புலேந்திரன், குமரப்பா உட்பட 12 தோழர்களின் வீர சமாதிமுன் ஒரு மானவிஉரத்த குரலெழுப்பிநடாத்திய பிரகடனம் இது.

ஐரோப்பிய பனி தந்த குளிரை போக்கடிக்கஇதமாக சூடேற்றியை இயக்கிவிட்டு கற்பனைக்குதிரையை தட்டி தேடியபோது (மொஸ்கொ முன்னேற்ற பதிப்பகத்தின் — வெளியீடுகள் பயன்படுத்தி வாசகங்களை கொண்டு) கிடைத்த தேடல்கள் அல்ல இவை. இரத்தமும்—உணர்வும் கலந்த எம் தேச விடுதலைப் போராட்டத்தில் உயிர்ப்பானசெழுமையை வெளிக்காட்டும் பிரகடனமே இவை.

====== * ======

இன்று எம் தேசிய விடுதலைப்போராட்டம் வீறு கொண்டு வருகின்றது—தென்னாசிய அரங்கில் ஒரு புரட்சிப் புயல் தமிழீழம் என்ற அரசியல் இலட்சியத்தில் தளங்களில் நின்று கருக்கட்டி வருகின்றது. தேசிய இன விடுதலைப் — போராட்டம் தன் முற்போக்கான சாரம்சத்தை ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டம் ஊடாக வெளிக்காட்டிநிற்கின்றது. எம் நிகழ்கால உலகம் பிரபாகரன் என்றஆற்றல் மிக்க விடுதலை வீரன் தலைமையில் இடம்பெறும் தமிழீழ தேசிய விடுதலைப்போரை தத்தமது அரசியல்—பொருளாதார— இராணுவ கண்களுடன் ஆழ ஆராய்ந்து வருகின்றது. இந்திய இராணுவ இயந்திரம் தனது ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட படைகளுடன் கூடிய தமிழீழ தேசிய விடுதலைபோரை நசுக்கும் தமது கோர எண்ணங்களைசெயற்

www.tamilarangam.net



படுத்த முடியாது திண்டாடி வருவதும்—இந்திய அரசியல் தலைமைகள் – இந்திய பத்திரிகைகள் வியட்நாம் ஒப்பீடுகளை மீள புரட்டிப்பார்ப்பதும் எம் தேசிய விடுதலைப் போரின் மகோன்னதத்தை படம் பிடித்துக்காட்டுகின்றது.

====**====

இது எம் தேச நிகழ்வுகள். எம் போர்க் களத்தில் இரத்தம் சிந்தி—வியர்வை சிந்தி—இறப்புகளில்—இழப்புகளில் கருத்தரித்து இளைய தோழர்களின் தியாகங்களில் உரம் பெற்று எழுந்து நிற்கும் தமிழீழ தேசிய விடுதலை போராட்டத்தின் பரிணாமம் இது.

====** ====

தமிழீழ விடுதலைப்போராட்டத்தின் வீச்சு வேகம் பெறத்தொடங்கியபோது "அரசியல் அகதிகள்" என்ற போர்வையில் பல்லாயிரம் இளைஞர்கள்—யுவதிகள்— குடும்பங்கள் ஐரோப்பிய, அமெரிக்க கண்டங்களுக்கு படையெடுத்தனர். மொழி—கலாச்சார வேறுபாடுகள், மிக வளர்ச்சிகண்ட முதலாளித்துவ முறைகளை புதிதாககாணும் மிரட்சி என்பன காரணமாக கடுமையான தடைகளை எதிர்கொண்டபோதும் படிப்படியாக அவ் அவ் தேசங்களில் தமிழ் அகதிகள் நிலை கொள்ளத் தொடங்கினர். வேலைவாய்ப்புக்களை பெற்றனர்—அகதி விசாக்களை உறுதிப்படுத்தினர்— குடிமனைகளை வேண்டினர்...... .

இவற்றுடன் கூடவே மிதமான அரசியல்ப்பிரக்ஞையும் வளரத்தொடங்கியது. விடுதலைப்போராட்டம் மீது பிரிக்கமுடியாத பாசம்—தாய்மண் மீது தணியாத ஆசை— இரத்தமும், சதையுமான உணர்வுகளை மனதில் தேக்கிவைக்கும் உணர்வு என்பன கொண்ட மக்களும், இவற்றிலிருந்து முரண்பட்டு அறியாமை காரணமாக உணர்வுகள் மரத்த மறுபகுதி மக்களும் இத் தமிழ் அகதிகள் சமூகத்தில் காணப்பட்டனர். இவற்றிடையே களைகளாக சில தற்குறிகள்— வக்கிரங்கள் என்பனவும் காணப்பட்டன.

ஆனல், அனைத்து தமிழ் அகதிகள் மட்டத்திலும் "விடுதலைப்போராட்டம்" உயிர்ப்புள்ள ஒரு விடயமாக கலந்துரையாடப்பட்டது. சந்திப்புக்களில்—விருந்துகளில்— கேளிக்கைகளில் கூட "நாட்டுப்புதினம்" அறியும் அவா நிலவியது.

இந்த மாற்றங்களுக்கூடாக உலகெங்கும் வாழும் தமிழ் அகதிகள் மத்தியில் தமிழீழவிடுதலைப் புலிகள் பலம் மிக்க சக்தியாக ஸ்தாபிக்கப்பட்டது. விடுதலைப்போராட்டத்திற்குத் தேவையான புறத்தேவைகளை தமிழ் அகதிகள் குறிப்பிட்ட அளவு நிரப்பி வருகின்றனர்.

www.tamilarangam.net



இந்த சூழ்நிலையில் மிக முதன்மையானது விமர்சனம். போராட்டக்களத்திலிருந்து—யதார்த்தக்களத்திலிருந்து பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் வாழும் தமிழ் அகதி சமூகத்தினுள் விமர்சனம் எனும் ஆயுதம் பலமான ஆயுதமாக காணப்படுகிறது. இவ் "விமர்சனம்" ஆரோக்கியமற்ற பாதையில் திருப்பப்பட்டால் போராட்டம் பலவீனப்படுத்தப்படும் ஆபத்து நிலவுகின்றது. ஏனெனில் தமிழீழ விடுதலைப்போராட்டம் நிகழ்கால சர்வதேச மாற்றங்களின் பலியாக மாறாது காப்பாற்றப்பட முழு மக்களின் பங்களிப்பு மிக அவசியமானது.

ஆகவே விமர்சனங்கள் ஆக்கபூர்வமானதாக அமைய வேண்டும் என்பது முக்கியமானது.

1. செய்திகள்—அவற்றின் உண்மைகள்
2. அவற்றின் பின்னணி
3. அவற்றின் எதிர்கால நோக்கம்

என்பன ஒரு விடயத்தைப்பற்றிய விமர்சனங்களில் மிக முக்கியமானது.

வதந்திகளை செய்திகளாக்குவதும்—இராணுவ வலய தேர்தல்களை ஜனநாயகம் எனக்காட்டி நடுப் பக்கத்தில் புள்ளி விபரம் தருவதும் இந்திய ஏகாதிபத்தியத்தினது அல்லது சிங்கள இனவாதத்தினது அல்லது புரட்சிகளை, போராட்டங்களை நசுக்கத் திரிகின்ற வல்லரசுகளினது நாசகாம் பண்ட வேலைகளாக கடந்தகாலம் நிரூபித்துள்ளது.

விடயங்களின் பின்னணி என்ன எனத்தெரிவதும், அதனது எதிர்கால நோக்கம் என்ன என அறிவதும் குழப்பங்களை தவிர்க்க உதவும்.

இவற்றிடையே இன்னுமொரு ஆபத்தும் வளர்ந்து வருகிறது. ஒருபுறம் சர்வதேசப் புரட்சிபற்றிய கதைக்களுடன் தமிழீழ தேசிய விடுதலைப் போரை கொச்சைப்படுத்தும் திரிபுவாதிகளும்—வன்முறைகளை கைவிடுங்கள் அடித்தால் வேண்டிக்கொண்டு அன்பு செலுத்துங்கள் எனக்கூறும் சமயவாதிகளும் ஈழத்தமிழ் அகதிகளின் கதவுகளை தட்டுவதும் கேட்கின்றது.

சாராம்சத்தில் முற்போக்கான தமிழீழ விடுதலைப் போராட்டத்தை—உருக்குறுதி வாய்ந்த இலட்சியப்பற்றுடன் சோசலிசத் தமிழீழமாற்றங்களுக்காக இரத்தம் சிந்தும் போராளிகளை கொச்சைப்படுத்தும் திரிபுவாதிகள் சர்வதேசப் புரட்சி பற்றிக் கதைப்பதும்—எழுதுவதும் ஒரு நாகரிகமாக கருதுகின்ற நிலையையும்— இன்று முகமூடி

www.tamilarangam.net



இட்டு "நாய்கள்" போன்று ட்ரக்குகளில் இறக்கப்படும் காட்டிக்கொடுக்கும் சமூகவிரோதிகளின் வெளிநாட்டுஏஜண்டுகள் இரகசிய இரகசியமாக மாற்றுப்பெயர்களைத்தேடி தேடல் புரிவதும் மிக அவதானத்திற்கு உரியது.

இந்நிலையில் விமர்சனம் எனும் ஆயுதம் எவர் கையில் இருக்குமாயின் எம் தேசவிடுதலைக்கு அதனூடு சர்வதேச சமூகங்களின் வர்க்க விடுதலைக்கு பயன்படும் ?

தேசிய விடுதலையை முற்போக்கான சாரளத்தினூடு பார்க்கும் பங்காளிகளின் கையில் இருக்கும் ஆயுதமேஆரோக்கியமானதும்-செயல்பூர்வமானதுமாகும்.

***************

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு

# நூல் நிலையம்

அரசியல், சமூக, சமுதாய, கலை, கலாச்சார இலக்கிய துறைகள் சார்ந்த 1500 க்கும் மேற்பட்ட நூல்களுடன் கூடிய நூல்நிலையமும், தமிழீழ, தமிழக, தினசரிகளுடன் கூடிய வாசிகசாலையும் தினமும் மாலை 2மணி தொடக்கம் இரவு 8மணி வரை திறந்திருக்கும்.

------******------******------*****

341,RUE DES PYRENEES,
75020 PARIS.
TEL:43 58 11 42

M°:JOURDAIN
BUS:26(L'ERMITAGE)

****** ****** *****

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# விடுதலைப் பாதையில் ஓர்நாள்

(உண்மைக்கதை)

ஓர் அமைதியான அதிகாலை. அன்றைய காலை மட்டும் ஏனோ ஓர் மயான அமைதியாய்... விடியலில் வேலைக்காய் புறப்பட்ட பாதங்கள் மீண்டும் தத்தம் வீடுகளிலேயே விரைவுடன் புகலிடம் தேடிக்கொள்கின்றன.

அண்மைக் காலமாக வேட்டுக்களுடன் கண்விழிக்கும் சாவகச்சேரி நகர் அன்றுமட்டும்...., இரை தேடி வந்த அமைதிக் கும்பலினால் ஓசையின்றி முற்றுகையிடப் பட்டது. முற்று முழுதான முற்றுகை.

சப்பாத்துக்களின் சீரான ஓசை. அரவம் கேட்டு விழித்த நாய்கள் பச்சைத் தொப்பிகளைக் கண்டதும் அமர்க்களமாகக் குரைக்கத்தொடங்கின. மக்கள் கிலி கொண்டு வீடுகளினுள்ளேயே முடங்கிக் கிடந்தார்கள். அமைதியைக் காக்க வந்தவர்களால் அன்றும் அமைதி சூறையாடப்பட்டது.

முற்றுகையில் அகப்பட்ட மூன்று விடுதலைப் புலிகள் பாய்வதா? பதுங்குவதா? யோசித்தார்கள். பாது காப்பிடம் ஒன்றில் தயார் நிலையில் பதுங்கியிருந்தனர்.

மதிய வேளையாகிக் கொண்டிருந்தது. திடீரென்று சரமாரியான துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள். அதைத் தொடர்ந்து மக்களின் பீதி நிறைந்த ஓலம். அந்த நேரத்தில்....

"தம்பி...." ஓர் குரல்.

'இந்த நேரத்தில் யார்....' ஓர் எச்சரிக் கையுடனும் எதிர்பார்ப்புடனும் சிறிது நேரம் காத்தி ருந்தவர்கள் எட்டிப் பார்த்தார்கள். யாரையும் காணவில்லை. ஆனால் சிறியதோர் பானையில் குத்தரிசிப் புக்கை மட்டும் இருந்தது.

புரிந்து கொண்டனர். பசிக்களை தீர்ந்தது.

www.tamilarangam.net



இடைக்கிடை கேட்ட துப்பாக்கி வேட்டுச் சத்தங்களையும் மனித வதையின்போது கேட்ட ஓலங்களையும் தவிர இப்போது வேறு ஓசையில்லை.

பொழுது சாயும் நேரம். மீண்டும்....

"தம்பி...." அதே குரல். "அவங்க போட்டாங்கள்...."

ஒருவித ஆவலுடன் எட்டிப் பார்த்தபோது..... ஓர் முதியவர்,

"தம்பியவை சாப்பிட்டியளோ....? குறை விளங்காதையுங்கோ. என்னால ஏலக்கூடியது இவ்வளவு தான் ராசா" அவர் கண்கள் பனித்தது.

"குறையோ! என்ன ஐயா இது...?" கை கூப்பி விடைபெற்றபோது மகாகவி பாரதி நினைவுக்கு வந்தான்.

"தழல் வீரத்தில் ...
குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ காண்"

தள்ளாடும் வயது வரினும் மனித நேயமும் விடுதலை உணர்வும் மறைந்திடுமா என்ன?

ooooo

(நன்றி–உணர்வு)

உணர்வு :– களத்திலிருந்து வெளிவரும் ஏடு.

oooooooooooooooooooooooooooooooooooooooooooo

ஒரு நீதியான லட்சியம் அமோக ஆதரவைப் பெறும் அதே சமயம் ஒரு அநீதியான லட்சியம் அற்பஆதரவையே பெறும் என்று எண்ணற்ற சான்றுகள் நிரூபிக்கின்றன. ஒரு பலவீனமான நாடு ஒரு பலமான நாட்டைத்தோற்கடிக்க முடியும். துணிவுடன் ஆயுதம் ஏந்தி, தமது நாட்டின் தலைவிதியை தமது சொந்தக்கரங்களில் எடுத்துக் கொண்டால் ஒரு சிறிய நாட்டு மக்கள் ஒரு பெரிய நாட்டின் ஆக்கிரமிப்பை நிச்சயம் தோற்கடிக்க முடியும். இது ஒரு வரலாற்று விதியாகும்.

– மாவோ –

oooooooooooooooooooooooooooooooooooooooooooo

www.tamilarangam.net



1988ஆம் ஆண்டு ஏப்பிரல் 30, மே 1 ஆகியநாட்களில் இலண்டனில் நடைபெற்ற அனைத்துலகத் தமிழ் மாநாட்டின் போது தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்குழு விடுத்த ஓர் அறிக்கையிலிருந்து எடுத்த சில பகுதிகளைக் கீழே காண்க :-

*********************************************

1987 யூலையில் இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டபோது வெளிப்பட்ட ஆரவாரமும் எழுந்த நம்பிக்கையும் தேய்ந்து தேய்ந்து மறைந்து விட்டன. இப்போது எஞ்சி நிற்பது துன்பமும், ஏமாற்றமும், அவநம்பிக்கையுமே; ஏனென்றால் அமைதிக்கும் ஒற்றுமைக்கும், மகிழ்ச்சிக்கும் பதிலாக வன்முறையும், அவலத்தையும் அதிகரிக்கச் செய்துள்ளது. இந்த ஒப்பந்தம் பொய்த்துவிட்டது. தமிழீழ விடுதலைப்போராட்டம் ஒரு தேசிய இனத்தின் அடிப்படை அரசியல் உரிமைகளோடு சம்பந்தப்பட்டது. எந்தவொரு வரைவிலக்கணத்தை வைத்து அளந்தாலும் ஈழத்தமிழர் தனியொரு தேசிய இனம் (DISTINCT NATION) என்பதை மறுக்க முடியாது. ஈழத்தமிழருக்கு ஒரு தாயகம் உண்டு, ,வாழையடிவாழை என நாம் வாழ்ந்த நிலமது; அத்தாயகத்துக்கு நன்கு வரையறுத்த எல்லைகள் உண்டு; எமக்கே தனியான ஒரு பண்பாடும், மரபும் உண்டு; வளமிக்கமொழியுண்டு; வரலாற்றுக்காலத்துக்கு அப்பாற்பட்ட வரலாறும் உண்டு. எனவே நாம் ஒரு தனித் தேசிய இனம் என்பதில் ஐயம் எதுவுமில்லை.

சுயநிருணயத்துக்கான எமது போராட்டம் சிங்கள அரசின் அடக்குமுறையாலும், வன்முறையாலும், இன ஒழிப்புச்செயலாலும் தோற்றுவிக்கப்பட்டது. கூட்டாட்சிக்குட்பட்ட தன்னாட்சி (FEDERAL AUTONOMY) தருமாறு நாம் கேட்ட நியாயமான கோரிக்கையை அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த இனவெறிச்சிங்கள அரசாங்கங்கள் மறுத்ததால் உருவெடுத்தது; தமிழினத்துக்கும், சிங்கள இனத்துக்கும் இடையே என்றும் முறுகி வளர்ந்த முரண்களாலும் மோதல்களாலும் எழுந்தது; அந்த முரண்களும், மோதல்களும் முற்றிவளர்ந்து தமிழ் தேசிய இனமும், சிங்களத் தேசிய இனமும் ஒற்றையாட்சி (UNITARY FRAMEWORK) அமைப்பின் கீழ் இணைந்து வாழ்வது இயலாதது, சகிக்க முடியாதது என்ற நிலை வந்ததன் பின்னர் உருவெடுத்தது. சிங்கள அரசு அலையலையாக கட்டவிழ்த்துவிட்ட அரச

www.tamilarangam.net



வன்முறைக்கெதிராக எம்மக்கள் தங்களைக் காத்துக் கொள்ள முடியாத இக்கட்டான நிலை ஏற்பட்ட தறுவாயில் எமது சாதாரண சாத்வீகப் போராட்டம் ஆயுதம் தாங்கிய போராட்டமாக மாறியது. எமது மக்களின் விடுதலை இயக்கம் என்ற தன்மையில் நாம் சுய நிர்ணயத்துக்கான எமது உரிமையைப் பெறுவதற்காகக் கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக ஆயுதப் போராட்டம் நடாத்தி வந்துள்ளோம். தமது சோதரர்களும், சோதரிகளும் சரிநிகர் சமமாகவும், சுதந்திரமாகவும் வாழவேண்டும் என்பதற்காக ஆயிரத்துக்கு மேற்பட்ட எமது விடுதலைப் போராளிகள் உயிர்த்தியாகம் செய்துள்ளார்கள். எமது மக்கள் அடைந்த இன்னலும்,இம்சையும் கொஞ்ச நஞ்சமல்ல. இருபதினாயிரத்துக்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழர் இறந்து விட்டார்கள். ஆனால் இந்த இழப்புக்களும் இடுக்கண்களும், இன்னல்களும் எம்மை இன்று இணைத்துள்ளன. அதனால் இன்று நாம் பலம் பொருந்தியவர்களாய் இருக்கின்றோம். எமது போராட்டமோ விடுதலைப் போராட்டம். எமது அரசியல் எதிர்காலத்தை நிர்ணயிப்பதற்கான உரிமைப்போராட்டம். ஆனால் இந்திய-இலங்கை ஒப்பந்தம் தமிழ்த் தேசியப் போராட்டத்தின் அடிப்படை அரசியல் கோரிக்கைகளை நிராகரித்துள்ளது. அதாவது 1985ல் திம்புப் பேச்சுவார்த்தைகளின்போது நாம் பிரகடனப் படுத்திய கோரிக்கைகளை நிராகரித்துள்ளது. திம்புப் பிரகடனம் தமிழ்மக்களின் ஒருமித்த விருப்பத்தை ஒத்திசைத்து வெளியிட்டது. எமது தாயகமான வடக்கையும்,கிழக்கையும் ஒப்புக்கொள்ள வேண்டுமென்றும்; எமது தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றும் சுயநிர்ணயத்துக்கான உரிமை நம் மக்களுக்கு உண்டு என்பதை ஏற்குக வேண்டுமென்றும் திம்புப் பிரகடனத்தின் மூலம் உலகுக்கு பறைசாற்றினோம். இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதென இலங்கைப் பாராளுமன்றம் நிறைவேற்றிய 13வது திருத்தமும்,மாகாணசபைச் சட்டமும் தமிழ்மக்களின் பிரத்தியேகமான குறைபாடுகளை கருத்தில் எடுக்கத்தவறிவிட்டன. மாறாக மத்தியரசின் கண்டிப்பான கட்டுப்பாட்டுக்குட்பட்ட தீவடங்கலுக்குமான நிருவாக அமைப்பொன்றை உருவாக்க இச்சட்டங்கள் வழிகோலுகின்றன. இந்திய அரசு, இந்தியப் பிராந்தியத்துக்குள் அதனது உடனடித் தேவையான புவி- அரசியல் நலன்களை உறுதிப்படுத்துவதில் நாட்டம் காட்டுவதாக தோன்றுகிறது. இலங்கை அரசோ தமிழ் விடுதலைப் போராட்டத்தை முறியடிப்பதையே மூலநோக்கமாகக் கொண்டுள்ளது. பிராந்தியத்தின் வல்ரசாக விளங்கும்

www.tamilarangam.net



ஒரு நாட்டின் புவி–அரசியல் அக்கறைகளுக்கும் இனப் பாகுபாடுகளுக்கும் சிங்கள அரசின் இனவெறிக்கும் எந் தமிழ் மக்கள் பலியாகிக் கொண்டிருக்கிறார்கள். எந்தமிழ் மக்களின் நலனையும், நல்வாழ்வையும் மனதில் வைத்து நாம் செயற்படுவதாலேயே இந்திய அரசும் இலங்கை அரசும் எம்மோடு முரண்படுகின்றன. இவ்வாறு வெவ்வேறு நலன்கள் முரண்படுதலே இன்று பெரும்போராக மூண்டுள்ளது. எமது விடுதலை இயக்கத்துக்கு எதிரா்க இந்தியா தொடுத்த போர் 1987ஒக்டோபரில் ஆரம்பித்து இன்றும் தொடர்கிறது. உலகத்தின் நான்காவது பெரிய படையைக்கொண்ட இந்தியா எம்க்கெதிராகத் தொடங்கியுள்ள ஆயுதப் போரின் அடிநோக்கம் தமிழ் மக்களை வன்முறையால் அச்சுறுத்தி எமது விருப்பிற்கு மாறாகக் குறை நிறைந்த ஆட்சிமுறை ஒன்றை எம் மீது திணிப்பதே. எம்மை பூண்டோடு ஒழித்து விடத் தீர்மானித்துவிட்ட மாபெரும் இராணுவ இயந்திரத்திற்கு (MILITARY MACHINE) எதிராக எம்மைப் பாதுகாத்துக்கொள்வதற்காகவே நாம் இப்போது போராடுகிறோம். சொல்லொணா இன்னல்களின் மத்தியில் தற்காப்பு முறைப்போரை நாம் புரிகிறோம் என்பது உண்மையேயாயினும் தமிழ்மக்களின் மனஉறுதியையும், திட சங்கற்பத்தையும் எத்தகைய இராணுவவல்லரசும், படை பலத்தால் அழித்துவிட முடியாது என்பதை இந்திய அரசுக்கு சுட்டிச் சொல்ல விரும்புகிறோம்.

மறுக்கப்பட்ட நியாயம் நிச்சயம் நிலைப்பெற்றே தீரும் என்பதையும் திம்புவில் எடுத்துரைக்கப்பட்ட கோட்பாடுகளே தமிழ்த் தேசிய இனப் பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கான தர்க்க ரீதியான அடியத்திவாரம் என்பதனையும் காந்திய பூமி உணர்ந்தே தீரும் என்பது எமது நம்பிக்கை. எமது போராட்டத்தின் வருங்கால நெறிப்பாடு இந்திய அரசாங்கம் எவ்வாறு நடந்து கொள்ளப்போகிறது என்பதில் தங்கியுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு ஸ்தூல நிலைமைகளுக்கும் வரலாற்றுத் தேவைகளுக்கும் உகந்த வடிவத்திலும், முறையிலும், அதன் போராட்டத்தைத் தொடர்ந்துநடாத்தும் ஆனால் தமிழ் மக்களின் இலட்சிய அபிலாசைகளை முன்னெடுத்தலே எப்போதும் அதன் முதல் நோக்கமாக இருக்கும்; இந்த இலட்சிய ஈடேற்றத்திற்காகவே பல்லாயிரமான எமது சோதர, சோதரிகள் உயிர்த்தியாகம் செய்துள்ளார்கள்.

***

www.tamilarangam.net





(களப்பலியாகிய முதலாவது பெண் போராளி)

1972 இல் ஆரம்பமான தமிழீழவிடுதலைக்கான எமது ஆயுதப்போரில் 1972 இலிருந்து 1984 வரையிலான காலப்பகுதியில் ஆயுதம் தாங்கிய பெண்களின் நேரடிப்பங்களிப்பானது இருக்கவில்லை. 1984ற்குப் பிற்பட்ட காலப் பகுதியிலேயே பெண்கள் நேரடியாகப் பங்களிக்கின்ற நிலைமை உருவாகியது. ஆயினும் ஆண்களுடைய எண்ணிக்கையுடன்ஒப்பிடுகையில் இது மிகக்குறைவே.

இதற்கான காரணம் தேசிய விடுதலைப் போரில்இணைந்து கொள்வதற்கு பெண்கள் சமூக ஒடுக்குமுறைக்கெதிராகப் போராட்டத்திற்குள் ஒரு போராட்டத்தை நடத்த வேண்டியுள்ளதே. இந்நிலையிலும் விழிப்படைந்து சமுதாயஒடுக்குமுறையை உடைத்துக் கொண்டு 1985 இல் பள்ளிப் படிப்பை இடையில் விட்டு விடுதலைப் போருக்குப் பாய்ந்து வந்த பெண்புலிக் கூட்டத்துள் ஒருத்திதான் 2 ஆம் லெப். மாலதி. தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் படைப்பிரிவில் முதன்முதலில் வீரமரணத்தைத் தழுவிக் கொண்ட பெண் புலியும் இவளே.

பெண்ணானவள் தான் விரும்பிய வண்ணம் சுதந்தரமாக வாழ முடியாமல் ஆண் மேலாதிக்கத்தாலும் பாரம்பரிய-மாக வந்த சமூக அடக்கு முறைகளாலும்அடக்கப்படுகிறாள். இது தொட்டிலில் இருந்து பாடைவரை தொடர்கிறது. முக்கியமாக உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்த பெண்கள் சீதனக் கொடுமை, உழைப்புக்கேற்ற ஊதியமின்மை ஆகிய கொடுமைகளால் மிகவும் துன்பத்திற்குள்ளாகினர். இதுமாலதியை வெகுவாகப் பாதித்தது.

இன்றைய முதலாளித்துவ சமுதாய அமைப்பு சிதைக்கப்பட்டு ஒரு புதிய சமதர்ம சமுதாயம் உருவாக்கப்படும் பொழுதுதான் பெண்கள் மீதான இந்த ஒடுக்கு முறைகள் ஒழிக்கப்படும் என பூரணமாக நம்பினாள் மாலதி. அது மட்டுமல்ல பெண்களுடைய பிரச்சனைகள் தீர்க்கப்பட வேண்டுமாயின் சமுதாயத்தில் பெண்கள் ஒரு புரட்சிகர சிந்தனையும் செயற்பாடுமுடைய கட்டமைப்பாக வளர்க்கப் படல் வேண்டும் என்பதையும் புரிந்து கொண்டாள்.

www.tamilarangam.net

எனவேதான் புரட்சிகர சமதர்ம தமிழீழத்தை அமைக்கின்ற விடுதலைப் போரில் பெண்கள் சகல விதத்திலும் பங்களிக்க வேண்டும்; குறிப்பாக ஆயுதமேந்தி உயிரை அர்ப்பணித்துப் போராட வேண்டும் என்பதில் பேராவம்கொண்டிருந்தாள். மேலும் ஆயுதப் போரில் பங்கு கொண்டுள்ள நாங்களும் மிகவும் திறமையாகவும் உறுதியாகவும் செயற்பட்டு எதிரியை எளிதில் வெற்றி கொண்டு எமது இலக்கை அடையவேண்டுமென்பதில் மிகவும் அக்கறை கொண்டிருந்தாள். அவ்வாறே அவளும் செயற்பட்டாள்.

மன்னார் ஆட்காட்டி வெளியைப் பிறப்பிடமாகக்கொண்ட இவள், சிறிலங்கா இராணுவத்தினருடனான தாக்குதல்கள்பலவற்றில் பங்கு கொண்டாள். கோட்டை இராணுவத்துடன் ஏற்பட்ட மோதல் ஒன்றின்போது எதிர்பாராதவிதமாகப் பெருமளவில் இராணுவம் முன்னேறியது. அச்சமயம் எமது பக்கம் மிகவும் குறைந்த எண்ணிக்கையிலேயே போராளிகள் நின்றனர். தனது தந்திரோபாய போர் யுக்தியால் எதிரியை பின் வாங்கச் செய்ததில் மாலதி முக்கிய பங்கு வகித்தாள்.

தனக்கு கொடுக்கப் படுகின்ற கடமைகளை சரிவரச் செய்வதுடன் வேலைகளை இயன்றளவு நேர்த்தியுடனும்சலிப்பின்றியும் செய்வாள். சக போராளிகளுடன் கலகலப்பாக பழகும், திடமான உடல்வாகு கொண்ட இவள் அசைக்க முடியாத மனவுறுதி உடையவள்.

யாழ் தொலைத் தொடர்பு நிலையம் எம்மவரால் தாக்கப்பட்ட போது அதில் மாலதி முக்கிய பங்கு வகித்தாள். அப்போது இவளின் உடலை ஊடல் துண்டுகள் தாக்கின. தசையில் ஏறியிருந்த ஷெல் துண்டுகளை வைத்தியரின்உதவி இன்றித்தானே 'பிளேட்' இனல் வெட்டி எடுத்தாள். இது அவளின் சகிப்புத் தன்மைக்கு ஓர் எடுத்துக்காட்டு.

1987 இல் பத்தாம் மாதம் பத்தாம் திகதி கோப்பாய் மண்ணைச் சுற்றிவளைக்கும் நோக்குடன் புறப் பட்டு வந்த பெருமளவு எண்ணிக்கையிலான இந்திய இராணுவ வாகனத்தொடர் மீது தாக்குதல் நடத்திய பெண்கள் அணியில் மாலதியும் ஒருத்தியாக நின்றாள். முன்னேறிக்கொண்டிருந்த இராணுவத்துடன் போரிடுகையில் எதிரிகள் பலரை வீழ்த்தி தீவிர சமர் புரிந்து, எதிரி திகைக்கப்போராடிக் கொண்டிருந்த பெண்புலி மாலதி இடையிலில் ஆக்கிரமிப்பாளனின் குண்டோன்றிற்கு இலக்காகி வீர மரணத்தை தழுவிக்கொண்டாடள.

( தொடர்ச்சி 6 ம் பக்கத்தில் )

www.tamilarangam.net



# தமிழீழ செய்திகள்

19/12/88 அன்று வெலிங்டன் தியேட்டர் சந்தியில் வைத்து விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் 2 இந்திய இராணுவத்தினர் அழிக்கப்பட்டனர். 4 பேர் படுகாயமடைந்தனர்.

26/12/88 அன்று மட்டக்களப்பில் இந்திய இராணுவ சுற்றிவளைப்பினுள் அகப்பட்ட முரளி என்னும் விடுதலைவீரன் சயனைட் அருந்தி வீர மரணத்தைத் தழுவிக் கொண்டார். இதேதினம் கடும் சுகயீனம் அடைந்திருந்த "நிக்கலஸ்" என்னும் விடுதலைப்போராளி தனது தாய் தந்தையரிடம் சென்றிருந்த வேளை இந்தியக் கைக்கூலிப்படையான E.P.R.L.F காடையர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

27/12/88 அன்று மட்டக்களப்பு புனைச்சேனை என்னும் இடத்தில் இந்திய ஏகாதிபத்திய இராணுவத்தினரின் சுற்றிவளைப்பினுள் அகப்பட்ட கப்டன் அர்ச்சுனா, அஜித். உருத்திரன், ராஜ் ஆகிய சுதந்திரப் போராளிகள்கடுமையான எதிர்த்தாக்குதலின்பின் வீரமரணத்தை தழுவிக்கொண்டனர்.

29/12/88 அன்று விடுதலைப் புலிகளினால் சுன்னாகம் இந்திய இராணுவமுகாம் தாக்கப்பட்டது. இதில் 2 இந்திய இராணுவத்தினர் அழிக்கப்பட்டனர். மேலும் பலர்படுகாயப்படுத்தப்பட்டனர். ஏனையோர் தப்பி ஓடிவிட்டனர். இம் மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் கப்டன்லோலோ வீரமரணம் அடைந்துள்ளார்.

சுன்னாகத்தில் மேற்கொள்ளப்பட்ட பிறிதொரு தாக்குதலில் 2 E.P.R.L.F சமுகவிரோதிகள் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர்.
இதன் எதிரொலியாக சிறிலங்கா இராணுவ பாணியிலான அப்பாவி மக்கள் மீது தமது காடைத்தனத்தை E.P.R.L.F இனர் கட்டவிழ்த்து விட்டதில் 3 பொது மக்கள்கொல்லப்பட்டனர்.

29/12/88 அன்று கட்டைபறிச்சான் என்னும் இடத்தில் இந்திய இராணுவத்தினரை இடை மறித்துவிடுதலைப்புலிகள் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டனர். இந்திய தரப்பில் ஏற்பட்ட சேதவிபரங்கள் சரியாகக்கிடைக்கப்பெறவில்லை.

www.tamilarangam.net



05/01/89 அன்று இந்திய இராணுவ கைக்கூலிகளான— E.P.R.L.F குண்டர்கள் 30 பேர் வதிரி—திக்கம் வீதியால் வந்து கொண்டிருந்த வேளை அப் பகுதி மக்களின்தகவலை அடுத்து ஸ்தலத்திற்கு விரைந்த விடுதலைப் புலிகள் அவ்30 குண்டர்களையும் சுற்றிவளைத்து கடும் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டதில் 6 E.P.R.L.F குண்டர்கள் அழிக்கப்பட்டனர். 20 பேர் படுகாயப் படுத்தப்பட்டனர். காயம்அடைந்தவர்களில் 10 கூலிகள் இந்திய இராணுவ பாதுகாப்புடன் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

02/01/89 அன்று விடுதலைப் புலிகள் இயக்கத்தின்சாவகச்சேரி பிரதேச பொறுப்பாளர் "றேகா" இந்திய இராணுவ சுற்றிவளைப்பினுள் அகப்பட்டு இறுதிவரைபோரிட்டு இறுதியில் சயனைட் அருந்தி வீரமரணத்தைத் தழுவிக் கொண்டார்.

05/01/89 அன்று வல்வெட்டித்துறைப்பகுதியில் விடுதலைப் புலிகள் இருவர் வீதியால் சென்ற வேளை அவர்களை இந்திய இராணுவத்தினர் சுற்றிவளைத்தனர். இதன்போது ஏற்பட்ட மோதலில் இந்தியத்தரப்பில் ஒருகப்டன் உட்பட 2 பேர் படுகாயமடைந்தனர். விடுதலைப்புலி வீரர்கள் முற்றுகையை உடைத்துக் கொண்டு பாதுகாப்பாக தளம் திரும்பினர்.

07/01/89 அன்று மன்னார் நானாட்டான் என்னும்இடத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் இந்திய இராணுவத்தினரும் E.P.R.L.F தமிழ் கைக்கூலிக்குழுவினரும் தங்கியிருந்தனர். இதற்கு காவலுக்கு நின்ற 5 E.P.R.L.F சமூக விரோதிகள் மீது விடுதலைப்புலிகள் மேறகொண்ட தாக்குதலில் 2 E.P.R.L.Fஇனர் அழிக்கப்பட்டனர்.
இத் தாக்குதலின் பின்னர் இப் பேடிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 2 அப்பாவிப்பொது மக்கள்கொல்லப்பட்டனர்.

07/01/89 அன்று காலை 10 மணிக்கு திருகோணமலை தென்னம்பத்தை என்ற இடத்தில் வைத்து இந்திய இராணுவத்திற்கெதிராக விடுதலைப்புலிகள் மேற்கொண்ட கண்ணி + வெடித்தாக்குதலில் 4 இந்திய இராணுவத்தினர் அழிக்கப்பட்டனர்.
இம் மோதலின் இறுதியில் எறிகுண்டு செலுத்தக்கூடிய S.L.R—1 S.M.G—1 , கண்ணிவெடி அகற்றும் கருவி—1 , S.M.G Rounds - 04 என்பன விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன.

www.tamilarangam.net



08/01/89 அன்று இராமநாதபுரத்தில் விறகு வெட்டச் செல்லும் தமிழ் மக்கள் மீது இந்திய இராணுவம்நடத்திய கண்ணிவெடித்தாக்குதலில் 6 பிள்ளைகளின் தந்தையான 42 வயதான கோபால் என்பவரும், 45 வயதான 4 பிள்ளைகளின் தந்தையான கிட்ணன் என்பவரும் கொல்லையுண்டனர்.

11/01/89 அன்று மட்டுவில் பகுதியில் தமிழ் கைக் கூலிகளான E.P.R.L.F கும்பலைச்சேர்ந்த ஒரு சமூக விரோதி விடுதலைப்புலிகளால் அழிக்கப்பட்டுள்ளார்.
அதேதினம் இந்திய இராணுவ பாதுகாவலில் புதுக்குடியிருப்பில் அழிப்பு நடவடிக்கைகளுக்காக புறப்பட்டு வந்த E.P.R.L.F சமூக விரோதிகளுக்கெதிராகவிடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் 3 E.P.R.L.F இனர் அழிக்கப் பட்டனர்.

13/01/89 அன்று வவுனியா பம்பைமடு பகுதியில்இந்திய இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட — தாக்குதலில் 2 இந்திய இராணுவத்தினர் அழிக்கபட்டனர். S.L.R ரக ரைபிள்கள் உட்பட சிலரக ஆயுதங்கள் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன. இம்மோதலில்கெவி என்னும் விடுதலைப்புலி வீரன் வீர மரணத்தைதழுவியுள்ளார்.

12/01/89 அன்று மட்டக்களப்பு பகுதியில் சின்னவன் என்னும் விடுதலை வேங்கை இந்திய இராணுவ சுற்றிவளைப்பினுள் அகப்பட்டு வீரமரணத்தை தழுவியுள்ளார்.

12/01/89 இந்தவாரம் நெடுங்கேணிச்சந்திப் பகுதியை அண்மித்துள்ள அன்சி பரந்தன, மதியாமடு, ஆகிய கிராமங்கள் மீது இந்திய இராணுவத்தினரால் மோட்டார் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. சில தினங்கள்நடைபெற்ற இவ் இராணுவ பயங்கரவாதத்தில் கொல்லப்பட்ட—அல்லது பாதிக்கப்பட்ட பொது மக்களின் விபரங்கள் கிடைக்கப்பெறவில்லை. இக்கிராமங்களைச்சேர்ந்த மக்கள்புளியங்குளம், சின்னடைப்பன் ஆகிய இடங்களில் அகதிகளாகதஞ்சம் அடைந்துள்ளனர். சுமார் 120 குடும்பங்கள் மோசமாக பாதிப்புக்குள்ளாயுள்ளன.

13/01/89 அன்று பண்டத்தரிப்பு பகுதியில் 1 உயர் அதிகாரி உட்பட 2 இந்திய இராணுவத்தினர் விடுதலைப் புலிகளால் அழிக்கப்பட்டுள்ளனர்.
அதேதினம் முல்லைத்தீவு பகுதியில் மேலும் 3 இந்தியஇராணுவத்தினர் விடுதலைப்புலிகளால் அழிக்கப்பட்டுள்ளனர்.

www.tamilarangam.net



13/01/89 அன்று வடமராட்சி பகுதியில் வதிரி, திக்கம், அல்வாய், பொலிகண்டி, கொத்தாவத்தை ஆகிய பகுதிகளில் இந்திய இராணுவத்தினர் பொதுமக்களை தாக்கியும், வீடுகளுள் புகுந்து தேடுதல் என்ற பெயரில் வன்முறை புரிந்துள்ளனர்.

வவுனியா – மாங்குளம் பகுதிகளுக்கு இடையில் சிறிலங்கா இனவாத இராணுவம் மீது விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்பட்டதாக்குதலில் 3 சிறிலங்கா துருப்பினர் அழிக்கப்பட்டனர். மேலும் 2 பேர் படுகாயப்படுத்தப்பட்டனர்.
இத்தாக்குதலின்போது A.K – L.M.G உட்பட சிலரக ஆயுதத் தளவாடங்கள் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன.

14/01/89 அன்று திக்கம் பகுதியில் நிலையெடுத்திருந்த இந்திய இராணுவம் மீது விடுதலைப்புலிகளால் மேற்கொண்ட சினைப்பர் தாக்குதலின் போது ஒரு இந்திய இராணுவக்கூலி கொல்லப்பட்டார்.

14/01/89 அன்றுபரந்தன் 5 ஆம் வய்க்கால் பகுதியில் பிரதேசவேலை செய்யும் ஞானம் என்ற சுதந்திரபோராட்டவீரர் இந்திய இராணுவ சுற்றிவளைப்பினுள் அகப்பட்டு தப்ப முடியாத நிலையில் சயனைட் அருந்தி வீரமரணத்தை தழுவியுள்ளார்.

14/01/89 அன்று பேசாலைப் பகுதியில் 60 க்குமேற்பட்ட அப்பாவி தமிழ் பொது மக்கள் இந்திய இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு தாக்கப்பட்டுள்ளனர்.

---*****------*****------*****--


**தொலைபேசி செய்தித் தொகுப்பு**

*ஈழத்துப் போர்க்களத்தில் – இந்திய-சிறிலங்கா அடக்குமுறைக்கு எதிரான போராட்டம் பற்றிய தினசரி செய்திகள் மற்றும் குறிப்புகளைக் கொண்ட தினசரி செய்திச் சேவை,*

*இல, 46364949*

www.tamilarangam.net



# இந்திய இராணுவச் சிலந்திவலை

இந்திய இராணுவம் தமிழீழத்திலிருந்து வெளியேறினால் தமிழ் மக்கள் சிங்கள இனவாதிகளால் படுகொலை செய்யப்படுவார்கள் என்ற வாதம் சிலரால் முன் வைக்கப்படுகிறது. தமிழ் மக்களைப் பாதுகாக்க இந்திய இராணுவம் தமிழீழத்தில் நிரந்தரமாகத் தங்கவேண்டும் என்கின்ற கருத்தே இவ்வாறு மறைமுகமாகச் சொல்லப்படுகிறது. தமிழீழப் போராட்டத்தைத் திசைதிருப்பவும், எமது மக்களை ஆதிக்க சக்திகளின் கீழ் நித்திய அடிமைகளாக வைத்திருக்கவும் வேண்டுமெனச் சதி செய்வோரே. இத்தகைய கருத்தைப் பரவவிட்டுள்ளனர். இதன் ஆபத்தைப் புரிந்துகொள்ளாத அப்பாவிகள் சிலரும் கிளிப்பிள்ளைபோல் இதனைச் சொல்லித்திரிகின்றனர். இந்திய இராணுவத்தின் வெளியேற்றம்தான் தமிழ் மக்களின் உயிர் உடைமைகளுக்கு, உரிமைகளுக்குப் பாதுகாப்பு என்ற உண்மையை இவர்கள் மறைக்கின்றனர். பதவி எலும்புகளுக்காக அந்நியர் கால்களை நக்கி, புதிய எஜமானர்களின் மரண அணைப்பில் தற்காலிக சுகம் காணும் அற்பபதர்களே இத்தகைய கருத்துக்களைப் பரப்புகின்றார்கள் என்பதை மக்கள் புரிந்துகொள்ளுதல் வேண்டும். இந்திய இராணுவம் உண்மையிலேயே அடித்து விரட்டப்பட வேண்டும் என்பதற்கான காரணங்கள் சிலவற்றை இங்கே ஆராய்வோம்.

1– எமது மண்ணில் நிலை கொண்டுள்ள இந்திய இராணுவம் அமைதிகாக்கும் படையுமல்ல; எமக்கு உதவிசெய்ய வந்ததுமல்ல. அது ஒரு ஆக்கிரமிப்பு இராணுவம். இந்திய அரசின் விரிவாதிக்கக் கொள்கையை அயலிலுள்ள சிறு நாடுகளின்மீதும், தேசிய இனங்கள்மீதும் நிலைநிறுத்தப் பயன்படும் கூலி இராணுவம். இந்திய இராணுவத்தின் கொடூரத்தையும், மிலேச்சத்தனத்தையும் நேரில் அறிவதற்கு எமது மக்கள் 5000 அப்பாவிகளைப் பலிகொடுத்துள்ளனர். அடி, உதை பட்டுள்ளனர். சிறைக்கூடங்களில் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டுள்ளனர். நூற்றுக்கணக்கான எமது பெண்கள் கற்பை இழந்து மானபங்கப்படுத்தப்பட்டுள்ளனர்.

2– தமிழீழம், சிறீலங்கா ஆகிய இரண்டும் அடங்கிய முழுத் தீவையும் தனது வல்லாதிக்கத்துக்கு உட்பட்ட நாடாக வைத்திருக்க இந்தியா எண்ணுகிறது.

www.tamilarangam.net



3– தமிழ்த் தேசிய இனப் பிரச்சனைக்கு இந்தியா வைக்கும் தீர்வு மிகக் கேவலமானது. சிங்கள நேரடி ஆட்சியின்கீழ் தமிழ் மக்களை நிரந்தர அடிமைகளாக்கும் தன்மை கொண்டது. எவ்வித அதிகாரமுமற்ற மாகாணசபை என்ற மேல் பூச்சினுள் சிங்கள ஜனாதிபதியினதும், கவர்னரதும் ஆட்சியை ஏற்படுத்துவது. தமிழ்ப்பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்களைச் சட்ட ரீதியாக்குவது. இந்தியாவிலுள்ள தேசிய இனங்கள் எவ்வாறு உரிமை இழந்துள்ளனவோ, அதிலும் மோசமான நிலையை எமது மக்களுக்களிக்கும் மாகாணசபைத்திட்டத்தை இந்தியா எமது தேசிய இனப் பிரச்சனைக்குத் தீர்வாக தந்து--ஹுந்தி, சிங்கள ஆதிக்கத்துக்கு தமிழர்களைஉட்படுத்துகிறது.

4– இந்தியா தனது பிற்போக்குவாத முதலாளித்துவ அரசியல் முறையை எமது நாட்டிலும் நிலைநிறுத்த முனைகிறது. இந்தியாவிலுள்ள 90% சாதாரண மக்களை ஏழ்மையிலும்,அறியாமையிலும் வைத்து, 10% மேல்த் தட்டு வர்க்கத்தினர் இரக்கமற்று சுரண்டுவதுபோல, இங்கும் அத்தகைய நிலையைத் தோற்றுவிக்கும் நோக்குடன் செயல்ப்படுகிறது.தெலுங்கானவில் சமுதாய மாற்றத்துக்கான மக்கள் இயக்கம் எவ்வாறு கொடூரமாக அடக்கப்பட்டது என்பது எமக்கு நல்லதொரு பாடம். இந்தியப் பொலிசாரும், இராணுவமும் அங்கு கட்டவிழ்த்துவிட்ட மிருக வெறியாட்டமும், கொலைகளும், ஒடுக்குமுறையும் இங்கு எமது மண்ணில் மீண்டும் அரங்கேற்றப்படுகிறது.

5– அடிமைத்தனத்திலிருந்து பூரண விடுதலை வேண்டிப் போராடும் தமிழீழ மக்களின் முன்னணிப் படையாக வழி நடத்தும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை அழித்தொழிக்க முனைகிறது இந்திய அரசு. தனது சுய நல ஆதாயத்துக்காக ஆபிரிக்க தேசிய காங்கிரஸ், பாலஸ்தீன விடுதலை அமைப்பு போன்ற தேசிய விடுதலை இயக்கங்களை ஆதரிக்கும் இந்தியா எமது விடுதலைப் போராட்டத்தை நசுக்கிகிறது. சமூக விரோதிகளையும்,காட்டிக் கொடுப்பவர்களையும், கைப் பொம்மைகளையும் பதவியிலிருத்தி, ஜனநாயக வண்ணம் தீட்டி அதன் பின்னணியில் அரச பயங்கரவாதத்தை தமிழ் மக்கள்மீது கட்டவிழ்த்துவிட்டுள்ளது. இதன்மூலம் தமிழ் மக்களிடையே தேசிய விடுதலையுணர்வை மழுங்கடித்து, எமது மக்களை சுதந்திரமற்ற, முகமற்ற, அடையாளம் இழந்த,ஆதிக்க சக்திகளுக்கு மண்டியிடும் மக்களாக, அடிமைகளாக வைத்திருக்க எண்ணுகிறது.

www.tamilarangam.net



இந்திய அரச படைகள் எமது மண்ணில் புரிந்து வரும் அட்டூழியங்களையும், அவை அங்கு தோற்றுவித்துள்ள அவல நிலைமைகளை அறிந்திருந்தும் நாம் இந்தியா குறித்து நல்லெண்ணம் கொள்வது தவறு மட்டுமல்ல; குற்றமும் ஆகும். இந்தியா தனது கொள்கைகளை மாற்றும் என்றோ, அது தமிழ் மக்களின் விடுதலைக்கு தனது ஆதரவை தரும் என்றோ கூறுவது குழப்பமான, குறுகிய பார்வையின் வெளிப்பாடாகும். சைபிரசில் அருக்கிய நாட்டு படைகளின் தலையீட்டை நாம் இங்கு உதாரணமாகக் காட்டுதல் முடியாது. இரண்டுக்கும் இடையில் பாரிய வேறுபாடு உண்டு. இங்கு நாம் இந்திய ஏகாதிபத்திய விரிவாக்கப் போக்கையே காண்கிறோம். அன்டை நாட்டிலுள்ள அடக்கப்பட்ட மக்களுக்கு உதவும் நோக்குஅல்ல. சின்னஞ்சிறு சீக்கிம் இந்தியாவோடு இணைக்கப்பட்டது. பூட்டான் இந்தியாவின் இராணுவ பாதுகாப்புக்கு உட்படுத்தப்பட்ட நாடாகியது. நேபாளத்தின் கழுத்தை இந்திய ஆதிக்கம் சுருக்குக் கயிறாக இறுக்கிறது. பாக்கிஸ்தானும், வங்காள தேசமும் அச்சுறுத்தி வைக்கப் பட்டுள்ளன. எமது நாடு ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கப் பட்டுள்ளது. இறுதியில் மாலைதீவு இந்திய இராணுவப் பிடியில் சிக்குண்டது. பூ மாலை போன்று கடலில் மிதக்கின்ற மாலைதீவுக் கூட்டங்களை தனது ஏகாதிபத்திய சிலந்தி வலைக்குள் கொண்டுவர சாணக்கியத் திட்டம் செய்யப்பட்டது. இந்தியாவின் இத் திட்டத்தின் பகடைக் காய்களாக 'புளொட்' அமைப்பின் கூலிப்படை பயன் பட்டது. மாலைதீவு அரசுக்கெதிரான சதியை முறியடிக்கும் சாக்கில் நுழைந்த இந்தியப் பூதம் மாலை தீவில் குந்திக்கொண்டது.

தென்னாசியப் பிராந்தியத்திலுள்ள எத்தேசமும் சுதந்திரத்தையோ, சமூக நீதியையோ, பாதுகாப்பையோ இந்திய வல்லாதிக்க அரசிடமிருந்து எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் இந்திய முதலாளித்துவ வர்க்கம் இந்தியாவைச் சூழ்ந்துள்ள நாடுகளைக் கட்டுப்படுத்தி தன் உற்பத்திப் பொருட்களுக்கான சந்தையாகச் சுரண்ட எண்ணுகிறது. தென்னாசியாவில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதியாக, ஒரேவிதமான கொள்கைச் செயற்பாட்டுடன் இந்தியா விளங்குகின்றது. தென்னாசியப் பிராந்தியத்தை குத்தகையாக அமெரிக்கா இந்தியாவுக்கு விட்டுள்ளது. 'சார்க்' கூட்டமைப்பு, இந்து சமுத்திர சமாதானப் பிராந்தியம் ஆகியவை இப்பிராந்தியத்தில் இந்தியாவின் ஆதிக்க செல்வாக்கை நிலை நாட்டும் கருவிகளே என்பதை இந்திய உபகண்ட நாடுகளின் மக்கள் வெகு விரைவில் உணர்ந்துகொள்வார்கள். அதிலிருந்து விடுபடுவதற்கான போராட்டங்களை ஆரம்பிப்பர்.

www.tamilarangam.net



ஆகவே தான், இந்திய இராணுவம் வெளியேறும்போது சிங்கள இனவாத சக்திகள் எம் மக்களை அடிமைப்படுத்தவும், எம் மக்கள்மீது பயங்கர தாக்குதல்களை மேற்கொள்ளவும் முயலும் என்பதிலும் உண்மை இருக்கத்தான் செய்கிறது. சிங்கள இனவாத இயக்கமான மக்கள் விடுதலை முன்னணியின் வளர்ச்சியையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். ஆயினும், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையில், உலகம் வாழ் தமிழ் மக்களின் ஒன்றிணைந்த போராட்டம் பாரிய இந்திய இராணுவத்தையும், அதன் கூலிப்படைகளையும் முறியடித்து வெளியேற்றுமானல், சிங்கள இனவாத சக்திகளை எதிர்கொள்வது பாரிய விடையமல்ல.

—சரத்பாபு—

*******

oooooooooooooooooooooooo

oooooooooooooooooooooooooooooooooooooooooooooooooooooo

உங்களுக்கு.....

எரிமலை பற்றிய உங்கள் ஆக்க பூர்வமான விமர்சனங்கள், அரசியல்—சமூக, நேர்க்குள்ள ஆய்வுகள், சமூக பிரக்ஞை உள்ள சிறுகதைகள், கவிதைகள் என்பன எதிர்பார்க்கப்படுகின்றன.

உங்கள் ஆக்கங்கள் ஆசிரியர் குழுவின் ஆய்விற்கும், திருத்தத்திற்கும் உட்படும்.

ஆசிரியர் குழு.

oooooooooooooooooooooooooooooooooooooooooooooooooooooo

oooooooooooooooooooooooo

www.tamilarangam.net



# நிழலில்லை நிஜம்

— ரோசி

"இலைமறை காயாக இருக்கின்ற நம் கலைஞர்களின் திறமைகளை வெளிக்கொணர்வதே இதன் நோக்கம்"

இது இலங்கைக் கலையகம் என்று சொல்லப்படுகின்ற ஒரு சில தனி நபர்களின் வாழ்க்கை வசதிகளை உயர்த்தவென்றே உருவாக்கப்பட்ட செலவுகளும், வரவுகளும் சில தனி நபர்களின் கஜானாவோடு சம்பந்தப்பட்ட ஒரு தொழிற்சாலையின் அண்மைக்காலப் பிரகடனம்.

நன்றாக இருக்கிறது! கொடுக்கப்பட்ட வசனம் நன்றாக இருக்கின்றது!

"இலைமறை காயாக இருக்கின்ற நம் கலைஞர்களின் திறமைகளைவெளிக்கொணர்வதே இதன் நோக்கம்"

நோக்கம் கூடச் சிறப்புடையதாகத் தான் இருக்கின்றது. ஆனல் உள்நோக்கம் தான் பலமாக உதைக்கிறது. காலஞ்சென்ற இயக்கங்கள் மக்கள் புரட்சி என்றும் வெகுஜனக் கிளர்ச்சி என்றும் நவர்ச்சிகரமான வார்த்தைப் - பிரயோகங்களைப் பாவித்துப் பாவித்தே தமது வயிற்றுப் பாட்டைக் கவனித்தது போல் இக் கலையகத்தின் முதலாளியும் படுகில்லாடிபோல் தெரிகிறது. ஒருவேளை இவருக்கும் காலஞ்சென்ற இயக்கங்களுக்கும், அன்னியோன்னிய - தொடர்புகள் அன்றிருந்திருக்கக்கூடும், ஒருவேளை இன்றும் இருக்கின்றதோ? யார் அறிவார்? அந்தப் பத்மநாபா- வைத்தவிர.

இலங்கைக் கலையகத்தின் செயற்பாடுகளைப் பார்க்குமிடத்து அதன் முதலாளி எனப்படுபவர் மிகவும் கைதேர்ந்த வியாபாரியோ? எனக் கேள்வி எழுப்பும் அளவிற்குக் கச்சிதமாக அலுவல்கள் நடந்தேறிக்கொண்டிருக்கின்றன.

பெட்டிக்கடை வைத்திருக்கின்ற ஒரு குட்டி முதலாளி தேசீய உணர்வோடு செயல்படுவதுபோல் உள்நாட்டில் - உற்பத்தி செய்யப்படும் சிறுசரக்குகளை விற்பனைசெய்வார், விற்பனையில் உயர்ச்சி ஏற்படுத்துவதற்காகத் தேசீய உணர்ச்சி நிரம்பிய வார்த்தைகளையள்ளித் தாராளமாக வீசுவார்.

www.tamilarangam.net



சிறுமுதல் பெருமுதல் ஆகும், குட்டி முதலாளி பண முதலை ஆகிவிடுவார், அவரது நோக்கம் சிக்கல் எதுவுமின்றி நிறைவேறிவிடும். இனி அவர் தன் சுய இச்சைகளுடன் செயல்ப்பட முடியும். வெளிநாட்டுப் பொருட்களைத் தாராளமாக இறக்குமதி செய்து இரட்டிப்பு இலாபத்தைப்-பெற்றுக் கொள்வார்.

இந்த வழிமுறையானது ஒரு கைதேர்ந்த வியாபாரியின் இலக்கணம்!

இலக்கணப் பிசகின்றி, இதே பாணியில்,, இதே உணர்வுகளோடு புனிதமான கலை இலக்கியங்களைக் கொச்-சைப்படுத்தித் தனது இச்சையைத் தீர்த்துக் கொள்ள ஒரு விசநாகம் படமெடுத்து விட்டது. அதற்குப் பால் வார்ப்பவன் முட்டாள், அடித்து விரட்டுபவன் புத்திசாலி!

ஆரம்பத்தில் நமது நாட்டு இளம் கலைஞர்கள் இந்தத் தனி நபரின் பொருளாதார உயர்ச்சிக்கு உதவி புரிந்தார்கள். அரங்க மோகம் பிடித்த சில கலைஞர்கள், இலட்சியமற்ற,, பொதுநல நோக்கமற்ற இம் மேடையைத் தமது கொச்சைத்தனமான கலைகளுக்குத் தளமாகக்-கொண்டனர். அப்பொழுதெல்லாம் "இலைமறை காயாக இருக்கின்ற நம் கலைஞர்களை வெளிக் கொணர்வதே எமது நோக்கம்" என்று தாராளமாகக் கூறிக்கொள்ளலாம்.

ஆனல் இன்று.......?

ரி.எம்.சௌந்தரராஜன் யார்? உண்மையில் அவரும் இலைமறை காய்தானா?

திரை இசையில் அவர் ஓர் பழம் அல்லவா? அவ-ரைமூடி மறைத்திருந்த இலைகள் உண்டா? அவற்றை விலக்கி இவர்கள் காட்டுவதற்கு.

ஆனல் இதே இலங்கைக் கலையகம், இலைமறை - காயாக இருக்கின்ற நம் கலைஞர்களுக்காக உருவாக்கப்பட்ட (?) இக் கலையகம் ரி.எம்.சௌந்தரராஜனின் நிகழ்ச்சியையும் ஒழுங்கு செய்து நடத்துகின்றது.

பகிடி!.. சோக்கான பகிடி! இதிலிருந்து அவரது உள் நோக்கம் புரிந்து கொள்ளக்கூடியதாகவிருக்கின்றது.

**உண்மையில் இலட்சியப்பிடிப்புடன், உயரியசிந்தனையுடன் சமூக முன்னேற்றத்திற்காக செயல்படுபவன்தான் முன்னுக்குப் பின் முரண்பாடில்லாமல் பேசமுடியும், செயல்படமுடியும்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இன்று இக்கலையகத்தின் வரவேற்பை ஏற்று டி.எம் சௌந்தரராஜன் வருவார், நாளை புராணப் படங்களில் நடிக்கின்ற நடிகை வருவர், பின்னல் காதல் காட்சிகளில் தோன்றும் கனவுக்கன்னி வருவார், அதன் பின்னர் பிறப்பு உறுப்புக்களை மட்டுமே மறைத்து ஆடும் மந்திரக்கோல் நாயகிகள் வருவார்கள்.

பார்த்தீர்களா கலையின் வளர்ச்சியை; இதைத்தான் கலைத்தாகம் என்கிறார்கள்; கலைத்துடிப்பு என்கிறார்கள். ஏய்! காலத்திற்கு காலம் நிறம் மாறும் பச்சோந்தியே! கொஞ்சம் நில்!

உனது மனைவிக்கு பெறுமாதகாலம்; அல்லது உனது தங்கை கல்யாணக்கோலத்தில் நிற்கிறாள்; அல்லது உனது குடும்பம் நிம்மதியாக வாழ ஒரு வீடு வாங்கவேண்டி இருக்கிறது உனது குழந்தைகளின் பொழுதுபோக்கிற்காக T.V, VIDIO வாங்க வேண்டியிருக்கிறது. இவற்றைஎல்லாம் சமாளிப்பதற்கு உனது தனிமனித உழைப்பு போதாமல் இருக்கிறது. அதனால் நீ பித்தலாட்டம் ஏதும் செய்யவேண்டியிருக்கிறது. சமூகத்தின் பலவீனத்தைப்புரிந்து அதன்மூலம் நீ பலசாலி ஆகப் பார்க்கிறாய். பணம் சேர்ப்பதற்கு பவித்திரமான வழிமுறைகளை கையாள்கிறாய்.

இதை ஏன் கலைச்சேவை என்கிறாய் ?

அடிமைப்பட்ட ஓர் சமூகம் தனது பரிதாபகரமான நிலையில் இருந்து மீட்சி பெறப் போராடுகிறது. ஆரம்பத்தில் அமைதிவழிப்போராட்டங்களில் அக்கறை காட்டுகிறது. அடக்கி ஆளும் இனத்தால் அமைதிவழிப் போராட்டங்கள் அர்த்தமற்றதாக்கப்படும்போது எழுச்சி கொண்ட அம் மக்களின் போராட்ட வடிவம் ஆயுதப் போராட்டமாக மலர்ச்சியடைகின்றது. விருத்தியடைகின்றது.

இது ஓர் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான இறுதி-நிலை !. தற்போது ஈழத் தமிழினம் இறுதியானதும், உறுதியானதும், பாரிய மாற்றத்தை ஏற்படுத்த வல்லதுமான இந்த ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளது.

உறுதியாக, உரமாக நம் மக்கள் எழுச்சியை வழிநடத்துகின்ற வலுப்படுத்துகின்ற பாரிய பொறுப்பு நம் கலை இலக்கியங்களுக்குண்டு. இதில் யாருக்கும் முரண்பாடு இருக்கவே முடியாது.

www.tamilarangam.net



நமது மக்களின் சிந்தனைகள், எண்ணங்கள், செயல்பாடுகள் தாம் நமது கலையின் கருவூலங்களாக அமைய முடியும். அதை விடுத்து நமது மக்களின், நமது மண்ணின் இன்றைய யதார்த்த நிலையை முற்றிலும் மறந்து கலை என்ற பெயரில் களியாட்டக் குப்பைகளை இறக்குமதி செய்கின்ற முதலாளிகளை எமது சமூகம் எப்படி மன்னிக்க முடியும்? இவ்வளவு மையான முறையில் சிந்திக்கவும், செயல்படவும் வேண்டிய இன்றைய நிலையில் தேச உணர்வுக்குத் திரையிடுகின்ற இப் பொல்லாத மனிதரின் செயலை எப்படிப் பொறுத்துக்கொள்ள முடியும்? காலம் இதற்கு ஓர் பதிலிறுக்கும் என்பதனை விடுத்து நாமே இதற்குத் தீர்க்கமான பதிலொன்றைக் கொடுத்தாக வேண்டும்.

* * * * * *

---

இதுவரை தமிழீழப் போரில் 1010 விடுதலைப் புலிகள் வீர மரணம் அடைந்துள்ளனர். தமிழீழ-இந்தியப் போரில் 479 புலிகள் வீர மரணம் அடைந்துள்ளார்கள். 28/2/89தொடக்கம் 30/03 89 வரை 5/ இந்திய இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 60 இந்தியக் கூலிகள் காயம் அடைந்தனர். 6 சிறிலங்க கடற்ப் படையினரும், 5சிறிலங்க இராணுவத்தினரும் கொல்லப் பட்டனர். இவர்களிடமிருந்து 32 ஆயுதங்களை கைப் பற்றியுள்ளனர். அவையாவன பிரேன் எல்.எம்.ஜி-4, கிறனேட் லோஞ்சர்-1, எம்.16 எல்.எம்.ஜி- 1, ஜி.3-3, எஸ் எல் ஆர்- 8, ரி 56- 1என்பனவாகும். எமது தரப்பில் 34 விடுதலைப் புலிகள் வீர மரணம் அடைந்தனர். மேஜர் கமல், மேஜர் கிரி, கப்டன் கைலன், கப்டன் சத்தியன், லெப் சரத், லெப் கரன், லெப் பவான், லெப் சிறைவாசன், லெப் மணியம், லெப் மோகன், லெப் சார்ள்ஸ், 2 வது லெப் சாந்தன், 2வது லெப்-லிங்கம், ரமேஸ், பிரேம், முஸ்தபா, கரி, ரொசான், ஜெயா, உரன், கமால், உபேந்திரன், சேவியர், சுசிந்தன், கிர்மாணி, றெஜினல்ட், மைக்கல், பிரேம், காந்தி, முருகன், மணிவண்ணன், ஆகிய வீரர்களுக்கு எமது வீர அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

அரசியல் பிரிவு

தமிழீழ விடுதலைப் புலிகள்.

---

பின் அட்டைப்படம் :-

கடந்த மாதம் 30 ஆயிரம் இந்தியப்படைகளுடனை முல்லைத்தீவு யுத்தத்தின் போது வீரமரணமடைந்த

மேஜர் கமல்

www.tamilarangam.net



# சிறைக்கம்பிகளுக்குப் பின்னால் இருந்து

-காஸ்ரோ

மருத்துவ மனை
காங்கேசன்துறை இராணுவ
முகாம்,
யாழ்ப்பாணம்.
24-10-88

மாண்புமிகு கி. வீரமணி அவர்கள்,
பொதுச் செயலாளர்,
திராவிடர் கழகம்.

அன்புள்ள அண்ண,

தாங்களும் தங்கள் கழகத் தொண்டர்களும் நலமாக இருக்கத் தமிழ்த் தாயினைப் பிரார்த்திக்கின்றேன். 9-10-88 அன்று இந்திய மண்ணிலிருந்து நாடுகடத்தப்பட்ட எமது பயணம் இன்றுவரை முடியவில்லை. எமது போராளிகளிடம் ஒப்படைப்போம் என உறுதிகூறி, அதற்குப் பொறுப்பாக Row, IB, Q Branch ஆகிய அதிகாரிகள் பலாலிவரை வந்தும், சொன்ன சொல்லைக் காப்பாற்ற இந்தியா இம்முறையும் தவறிவிட்டது. விமானத்தில் எம்மை அழைத்துவரும்போதே ஆடு, மாடுகளைப்போல கை, கால்கள் கட்டப்பட்டு கொண்டு வரப்பட்டோம்.

பலாலிவரையும் விமானத்தில் வந்து, பின்பு கைகள் பின்பக்கமாகக் கட்டப்பட்ட நிலையிலேயே கெலிகெப்டரில் பருத்தித்துறை முகாமிற்கு கொண்டுவரப்பட்டு அங்கு எமது விபரங்கள் அறியப்பட்டு, அடைத்து வைக்கப்பட்டோம். பருத்தித்துறையில் நாங்கள் 78பேர், காங்கேசன்துறையில் 70பேர், மதுரையிலிருந்து வந்தவர்கள் திருகோணமலையிலுமாக நாம் தடுப்புக் காவலில் இடப்பட்டோம். Jaundice இனல் நான் ஏற்கனவே பாதிக்கப்பட்டதனல் மறுநாள் காங்கேசன்துறையிலுள்ள மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டேன். இங்கு வந்ததனல் பல உண்மைகளைத் தெளிவாகவும் ஆதாரபூர்வமாகவும் அறிந்துகொள்ள முடிந்தது. காங்கேசன்துறை இராணுவத் தடுப்பு முகாம் இலங்கை அரசின் 'பூசா' முகாமிற்கு ஒத்ததாகும். இங்கு யாழ் மாவட்டத்தில் கைது செய்யப்பட்டு விடுதலைப் புலிகள் எனச் சந்தேகிக்கப்படுபவர்கள் அடைக்கப்பட்டுள்ளனர். இதுவரை இந்த முகாமில் மாத்திரம் 1400 பேரிற்கு அதிகமானோர் அடைக்கப்பட்டுள்ளனர். சிலரை விடுதலை செய்தாலும் பெரும்பாலோர் கேள்விக்குறியுடன் காலத்தைக் கழிக்கின்றனர். இதில் 750பேரிற்கும் உள்ளேயே விடுதலைப் புலிகளும்

www.tamilarangam.net



அவ்வியக்க உதவியாளர்களும். மிகுதி அனைவரும் அப்பாவிப்பொதுமக்களாவர். இவற்றைவிட நாட்டின் பல்வேறு பாகங்களிலும் மூலைமுடுக்குகளிலும் உள்ள ராணுவ முகாம்களில் கணக்கற்ற அப்பாவிப் பொதுமக்கள் காரணமின்றிக் கைது செய்யப்பட்டு சித்திரவதைக் கொடுமைகளை அநுபவித்து வருகின்றனர். இலங்கை அரசின் '4ம் மாடி' எவ்வாறு மோசமான சித்திரவதைக்குப் பேர்போனதோ அதைவிட மோசமாகப் பேர்போனது மருதனைமடம் இந்திய இராணுவ முகாம். மனித நாகரீகமில்லாமல் மிருகத்தனமான சித்திரவதைகளின் உச்சக்கட்டமாக அக்டோபர் முதல் மாசிவரை மாத்திரமே 13 அப்பாவித் தமிழர்களை இம் முகாமில் அடித்துக் கொன்றுள்ளனர். அதற்கு பிறகு எத்தனை உயிர்கள் போனது என்பது இராணுவ இரகசியம். நாவற்குழி இராணுவ முகாமிலும் பல உயிர்கள் போய் உள்ளது. காங்கேசன்துறை முகாமிலும் விசாரணை என்ற பெயரில் கொடூரமான மிருகத்தனமான சித்திரவதைகள் நடைபெற்று வருகின்றன. தலைகீழாகக் கட்டி அடிப்பது முதல் மின் சாரட அதிர்ச்சி கொடுப்பதுவரை இங்கே நடைபெற்று வருகின்றது. பரம், மன்டலிஸ், அன்பு, மன்சூர் உட்பட பலரை ஜீப்பில் கட்டி கல்லிலும் முள்ளிலும் இழுத்துள்ளனர். மூட்டைப் பூச்சிக்கு மருந்தடிக்க வேண்டும் எனக் கேட்ட ஜெயவிந்தன், குமார் ஆகிய இருவரையும் அடித்துள்ளனர். இந்திய இராணுவத்தினர் வந்தால் இங்கு அடைக்கப்பட்டுக் கிடப்பவர்கள் Good morning , Happy என்பன சொல்ல வேண்டும். சமீபத்தில் 'A' block என்ற பகுதியில் 109 கைதிகள் உள்ளனர். இங்கு வந்த மேஜர் லலித்நாத் என்பவருக்கு Good Morning சொல்லாததினால் எல்லாரும்150 தோப்புக்கரணம் போட்டனர். இவர்களது மிருகத்தனமான அடியில் தயாளன் உட்பட மேலும் சிலருக்கு மனநோய் பிடித்து தற்போது நான் இருக்கும் மருத்துவ மனையில்சிகிச்சை பெற்று வருகின்றனர். பீற்றர், பாலசுந்தரம் போன்ற வேறு சிலரை தலை மட்டும் வெளியே தெரியும்படி மண்ணில் புதைத்து தோளுக்கு மேலால் டாங்கி,றக் போன்றவற்றை ஏற்றிச் சென்றுள்ளார்கள். சோதிநாதன் என்னும் 55வயது பெரியவரை கொண்டுவந்து அடி அடி என்று அடித்து L.T.T.E இல் முக்கிய அரசியல் பிரமுகர் என வைத்துள்ளனர். 80வயதுக்கு மேற்பட்ட கிழவர் ஒருவரையும் கண்ணிவெடி வைத்ததெனக் கைது செய்து அடித்துள்ளனர். கே.கே.எஸ் முகாமில் மேஜர் நாயர், மேஜர் சர்மா, கப்டன் ராஜன் கோவிந்தன், சுகுமார் போன்றவர்கள் சித்திரவதையில் பேர் போனவர்கள். இங்குள்ள இராணுவ அதிகாரிகள் எ எவ்வளவுக்கு எவ்வளவு கைதிகளைச் சித்திரவதை செய்கிறார்களோ அல்லது பொதுமக்களைக் கொல்லுகிறார்களோ அவ்வளவுக்கு அவர்களுக்கு பதவி உயர்வு கிடைப்பதை அவதானி

www.tamilarangam.net



க்க முடிகிறது. பதவி உயர்வுக்காக பல அதிகாரிகள் செய்யும் அட்டூளியங்கள் சொல்லில் அடங்கா. இம் முகாம் உணவினை இங்குள்ள நாய்கள் கூட உண்ணு. அவ்வளவு மோசமாகவும் 'புழுக்கள்' நெளியவும் கொடுப்பார்கள்.

இங்கு தலைகீழாகக் கட்டித் தொங்கவிட்டு அடிப்பதும், ஆண் குறியில் மின்சாரம் பாச்சுவது, மலவாசலில் கொதி எண்ணெயும் மிளகாய்த்தூளும் கலந்து ஊற்றுவதும், இரத்தக் காயங்களுக்கு உப்புத்தண்ணீரும் மிளகாய்த்தூளும் கலந்தூற்றுவது என்பது சர்வசாதாரணம். தாளையடி என்னும் கிராமத்தில் அமைந்துள்ள இந்திய இராணுவ முகாமின் பொறுப்பாளர் அவ்வூரிலும், அதன் அயலூர்களிலும் உள்ள அழகான பெண்களின் சகோதரர்களைப் பிடித்து அப் பெண்கள் வந்தால்த்தான் விடுவேன் என்று கூறி அப் பெண்களை தனது இச்சைக்குப் பயன்படுத்துகின்றார். இவற்றைவிட இந்திய ராணுவத்தினரால் E.P.R.L.F என்ற காட்டிக்கொடுக்கும் கும்பல்களை ஆயுதபாணிகளாக யாழ் குடா நாட்டில் விட்டுள்ளனர். இந்தியாவிலும், கே.கே.எஸ் தடைமுகாமிலும் தலையாட்டுவதற்காக நின்ற E.P.R.L.F இயக்கத்தினர்களை ஆயுதங்களுடன் குடாநாட்டில் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களை வெட்டையாடுவதற்கு விட்டுள்ளனர். கடந்த 10 நாட்களில் மட்டும் கே.கே.எஸ் முகாமில் வைக்கப்பட்டிருந்த E.P.R.L.F T.E.L.O, P.L.O.T.E உறுப்பினர்கள் 37 பேரை பிஸ்டல் கொடுத்து இந்திய இராணுவத்தினர் அனுப்பியுள்ளனர். இவர்கள் ஏனைய கைதிகளைப் பார்த்து துப்பாக்கிகளைக் காட்டிவிட்டுச் சென்றுள்ளனர். இவர்கள் போனபின்பு குடா நாட்டில் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் பலர் கொல்லப்பட்டுள்ளனர்.

எது எவ்வாறு இருந்தாலும் மக்களின் ஆதரவு பரிபூரணமாக விடுதலைப் புலிகளின் பக்கமே உள்ளது. எமது புரட்சிகர போராட்டத்தை எந்தவொரு சக்தியாலும் அடக்க முடியாது என்பது வரலாற்று உண்மை.

"புலிகளின் தாகம் தமிழீழம் தாயகம்"

அன்புத் தம்பி
வ். காஸ்ரோ


---

விடுதலை,

கிடைப்பது நிச்சயம் என்பது அல்ல,
கிடைக்க வேண்டும் என்பது நிச்சயம்

www.tamilarangam.net





# நமீபியா?

ஏப்பிரல்-1 உலகெங்கும் கேலியாக முட்டாள்கள் தினம்கொண்டாடப் படுகின்றது. ஆனால் வெள்ளையர் ஆதிக்கத்தில் மூச்சு விட நீதிதேடும் நமிபிய மக்கள் அத்தினத்தில் நிஜமாகவே முட்டாள் ஆக்கப்பட்டனர். போர் நிறுத்தம்-ஐ.நா.கண்காணிப்பு-ஐ.நா.சமாதானப்படை என்பவற்றை நம்பிய தென்மேற்கு ஆபிரிக்க மக்கள் இயக்கத்தின் வீரம் மிக்க சுமார் -100 போராளிகள் தென்னாபிரிக்க இனவெறிப் படைகளால் தாக்கி அழிக்கப்பட்டனர். சியோனிசத்தையும்-பாசிசத்தையும்-காந்திய வேடம் போட்ட டில்லி சுய வஞ்சகத்தையும் மௌனமாகப்பார்க்கும்"கையாலாகாத" ஐ.நா.சபை இதற்கு விசாரணைக் கமிசன் அமைத்துவிசாரித்து பின்னர் ஜீரணிக்கப்போகின்றது.

09/07/1915 இல் தென்னாபிரிக்க படைகளால் நமிபியா ஆக்கிரமிக்கப்பட்டது முதல் நமிபிய மக்கள் ஏராளமான ஐ.நா.தீர்மானங்களை -சர்வதேச கண்டனங்களை-ஏராளமான தடை விதிப்புகளை தமது ஆக்கிரமிப்பாளர்களுக்கெதிராக உலகம்சுமத்துவதை பார்த்திருந்தனர். உடன்பாடுகளும்-ஒப்பந்தமும் சுதந்தரத்தை மீட்டுத்தரா என்ற சூழ் நிலையில் ஆயுதம் தாங்கிய உரிமை கீதத்தை நமிபிய மக்கள், தென்மேற்குஆபிரிக்க மக்கள் இயக்கம் (SWAPO) தலைமையில் நடாத்தினர். ஐ.நா. அங்கீகாரம், பல சர்வதேச நாடுகளின் அங்கீகாரம் என்பன கொண்டு நமிபிய மக்களின் உரிமை கீதத்தை வலுவேற்று வந்த SWAPO கடந்த மார்கழியில் நியுயோக்கில் வைத்து ஐ.நா.சபையில் வெளியிடப்பட்டநமிபியா தொடர்பான புதிய சமாதானத்திட்டங்களின் பிரகாரம் ஐ.நா-மேற்பார்வையிலான சுதந்திரத்தை எதிர்பாத்திருந்தது.

பல நாட்டுப் படைகள் ஐ.நா கொடியின் கீழ் நமிபியாவில் தரையிறக்கப்பட்டனர். தென்னாபிரிக்க அடக்குமுறைப் படைகளும்- SWAPO கொரில்லாப் படைகளும் போர் நிறுத்தம் அறிவித்தனர். மெதுமெதுவாக ஒரு சுதந்திரப் பிரகடனம் வகுக்கப்பட்டு வந்தது. இன்றைய உலக அரசியல் மாற்றங்கள் அடக்கப்பட்ட மக்களின் நியாயபூர்வமான ஆயுதப் போராட்டத்தை கைவிட வைப்பதில் காட்டும் ஆர்வத்தை நமிபிய விடயத்தில் சர்வதேச நாடுகள் காட்டின. அடக்குமுறை படைகள் வாபஸ் பெறல்-தேர்தல்கள் மூலம் அடக்குமுறைகளால் சிதறுண்ட நமிபிய மக்கள் இடையே குழப்பகர கட்சி அரசியலை புகுத்தல் என திட்டங்கள் வகுக்கப்பட்டன. ஆனாலும் வெள்ளைப் பன்றி முட்டிப் பார்த்தது. தனது நவீனரக வான், தரை தளபாட சகிதம், நாட்டின் வட எல்லை கிராமங்களில்நிலை எடுத்திருந்த கொரில்லாக்கள் மீது தாக்குதலைத் தொடுத்தது. தன்னை நியாயப் படுத்த ஆயிரம் ஏற்கமுடியாத காரணங்களை சுமத்துகின்றது. ஆனால் வீரமிக்க போராளிகள் எதிர்த்தாக்குதலைநடத்துகின்றனர்.

மீண்டும் ஐ.நா சமாதானப் படைகளை வலுப்படுத்தி இன்றைய "சமரச" உலகு நமிபியாவை ஒத்துப் போக வைக்க முயல்கின்றது. உலக சமூகத்தினை மதிக்க வேண்டிய கட்டாய தேவைக்கு வும்-நமிபியாவும் மீண்டும் தள்ளப்படும். ஆனால் நடந்த வரலாறுகளை அடக்கப் படுகின்றவர்கள் நிகழ்காலத்திலும்-எதிர்காலத்திலும் மனதில்பதிப்பார்கள்.

-நன்றி-

www.tamilarangam.net





ஏய்!
உன்னைத்தான்!
அடம்பிடிக்காமல் அருகில் வா!
சொல்வதைக் கொஞ்சம்
சமத்தாய் கேளு!
இந்தத் தெருவால்
வருவோர் போவோரை
சிறிது நோக்கு!
புலிகளைப் போல யாரும் தெரிந்தால்
மேலும் கீழும் தலையை ஆட்டு!
இல்லை என்றால்
அப்படி இப்படி ஆட்டு, போதும்!
சொன்னது யாவும் புரிந்ததுதானே!
ம்! புரிந்தது என்றால் "ஓவல் சேப்பில்"
தலையை ஆட்டு
"good"
சரி! சரி! இப்போ உனது கூட்டில்
சென்று தூங்கு!
கூப்பிடும் போது
வந்து பதுங்கு!

-தில்லை-

www.tamilarangam.net



# ஆயுதப்போராட்டமே உண்மையான ஜனநாயகத்துக்கு வழி.

முதலாளித்துவ அமைப்பைக் கொண்ட ஓர் நாட்டில் உண்மையான ஜனநாயகம் இருக்காது. ஒரு குறிப்பிட்ட முதலாளிகள் தமது பணபலம், தமது கட்டுப்பாட்டில் இருக்கும் பிரச்சார பலம், இவற்றிற்கு மேலாக ஆயுதபலம்கொண்டு பெரும்பான்மை மக்களான தொழிலாளி- விவசாயிகளை ஆசைகாட்டி ஏமாற்றி, அடக்கி, ஒடுக்கி, சுரண்டி உண்மைகளை திரித்து தமது நலன்களைப் பாதுகாத்துக்கொள்வார்கள். இதற்கு ஜனநாயகம் என்றும் பெயர் சூட்டுவார்கள்.

ஆயுத பலமானது முதலாளிகள் நலனைப்பாதுகாக்கவும் அதேவேளை அவர்களுக்கு எதிராக எழும் தொழிலாளர்-விவசாயிகள் போராட்டங்களை நசுக்கவும் பயன்படும். சாதாரண தொழிற்சங்க நடவடிக்கைகளை ஆயுதபலத்தால் நசுக்கப்படுவதை நாம் அறிவோம்.

நாம் ஓர் சோசலிச தமிழீழத்தை அமைப்பதற்காகவே போராடுகின்றோம். ஒடுக்கப்பட்ட, சுரண்டப்பட்ட தொழிலாளர், விவசாயிகள்கையில் அரசு அமையும் போது தான் உண்மையான ஜனநாயகம் மலர்கின்றது. சிறுபான்மையோரான முதலாளிகள் கையில் உள்ள அதிகாரத்தைபெரும்பான்மையோரான தொழிலாளர்கள்-விவசாயிகள், புத்திஜீவிகள் அகிம்சை மூலமோ, தேர்தல் மூலமோ பெற முடியாது. ஆயுதப்போராட்டத்தின் மூலமே இது சாத்தியமாகும்.

ஆயுதப்போராட்டத்தின் மூலம் நிலபிரபுத்துவத்தையும், ஏகாதிபத்தியத்தையும், முதலாளித்துவத்தையும் ஏதேச்சதிகாரத்தையும் எதிர்த்துப்போராடி சோசலிசசமுதாயத்தையும் அமைத்ததின் மூலம் சுரண்டலற்ற வர்க்க பேதமற்றசமுகத்தை உருவாக்கி வறுமையை அறவே ஒழித்து உலகிற்கு வழிகாட்டி நிற்கின்றன சோவியத்யூனியனும், மக்கள் சீனக் குடியரசும்.

www.tamilarangam.net



அதேவேளை இந்திய முதலாளிகள் ஆயுதப்புரட்சியின்றி அகிம்சை வழியில் சுதந்தரத்தை பெற்ருர்கள். உலகில்தன்னை பெரிய ஜனநாயக நாடு என இந்தியா பெருமைப்படுகின்றது. இந்திய சுதந்திரம் அடைந்து 40 ஆண்டுகள் கழிந்து விட்டன. இன்று இந்தியாவில் 24 கோடி மக்களுக்குமேல் வறுமைக்கோட்டின் கீழ் வாழுகின்றனர். (03/05/88இந்திய மாநில செய்தி) ஓர் குறிப்பிட்ட சிலரேஇந்தியாவின் செல்வங்களை அனுபவிக்கிஞர்கள்.

தமது நலன்களைப் பாதுகாக்க, வர்க்கபேதங்களை பேணிக்காக்க சாதி, மத அமைப்புக்கள் வளர்க்கப்படுகின்றன.

சாதியத்தின் பெயராலும் மதத்தின் பெயராலும் - தொழிலாளிகள்-விவசாயிகள் பலம் திட்டமிட்டு சிதறிக்கப்படுகின்றது.

தமக்கெதிராக ஓர் ஆயுதப்போராட்டம் வளரக்கூடாது என்பதால் அகிம்சையை போதிக்கிருர்கள்.

இங்கு அவர்களது அயல் நாட்டில் நடக்கும் ஓர் சோசலிச புரட்சி தம்மை அழித்து விடுமோ என்ற பயத்தால் சிறிலங்கா முதலாளிகளோடு கூட்டுச் சேர்ந்து தமிழீழப் போரை அழிக்க முனைகின்ருர்கள்.

இதைத்தான் இந்தியா ஜனநாயகம் என்கின்றது என்பதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

தமிழீழ மக்களுக்கு என்ன வேண்டும் என்பதை இந்தியா தீர்மானிக்க முடியாது. அதை தமிழீழ மக்கள்தான்- தீர்மானிக்க வேண்டும்..

நாம் அடிமைகளாக வாழக்கூடாது என்ருல் ஆயுதங்களை கீழே போடக்கூடாது.

உண்மையான ஜனநாயகம் மலர வேண்டுமென்ருல் - நாம் ஆயுதங்களை கீழே போடக்கூடாது.

சுதந்திர சோசலிச தமிழீழத்தில்தான் உண்மையான ஜனநாயகம் மலரும்.

இன்று ஜனநாயகத்தின் பெயரால் ஆயுதங்களை கையளியுங்கள் என்பவர்கள் தமிழீழப் போராட்டத்திற்கு - விரோதிகள் மட்டுமல்ல துரோகிகள் என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது.

*—*—*

www.tamilarangam.net



வாசகர்பகுதி

# அண்ணனிடமிருந்து...

அன்புள்ள தம்பி !

உரிமையிழந்து, உடமையிழந்து,
உறவிழந்து, உணர்விழந்து,
உயிரிழக்கினும் – உன்னத
இலட்சியம் இழக்காமல்
முகவரியிழந்து முகம் மறைந்து நிற்கின்றேன்.

கிடுகுவேலியைப் பிய்த்துக்கொண்டு ஓடினாய்,
பிழைக்கட்டும் என்பதற்காக விட்டுவிட்டேன்.
இப்போ பிழைத்துவிட்டதடா
இப்படி பிழைக்குமென்று தெரிந்திருந்தால்..........
அன்று தூக்கிய துப்பாக்கியோடு நான்.......
நீ மதில்களையும் இப்போது உடைத்துவிட்டாய்.
நீ இலட்சங்களை கோடியாக்க அலைகின்றாய்,
நான் இலட்சியங்களோடு தெருக்கோடியில் அலைகின்றேன்.
ஒருவேளை..........
காசு அனுப்புகிறேன் வாவென்று அழைப்பு விடுப்பாயோ !
வேண்டாம்........

அங்கே நீ காரோடும், வீடோடும்
படாடோபமாக சொர்க்கபுரியில்..........

நீ வாழ்வது வாழ்க்கையில்லையடா.
நம் தெருவில் நாறுகின்ற எம்மினத்தையும்,
இழந்த உறவுகளையும்,
இரத்தக் கறைகளையும்,
சாம்பர் திடல்களையும்
சாட்சியாக வைத்துத்தான்
நீ இந்த சுகபோகத்தை அனுபவிக்கின்றாய்.
எங்கள் வேதனைகளிலும் சோதனைகளிலும்
நீ சாதனை செய்து கொண்டிருக்கின்றாய்.

நீ மட்டுமல்ல, உன்னைப்போல.......
ஏறிய ஏணியை உதைத்துவிடாதே!

வாடி வதங்கி, வழியற்று, வக்கற்று
வதைபட்டுச் சிதைபட்டு இங்கே
வருந்தி அலையும் எம்மினத்தைப்பார்!

www.tamilarangam.net



விதியை நொந்தழுது காட்டிலும் மேட்டிலும்
வீடிழந்து வாசலிழந்து வீதியிலும் விடுதியிலும்
நாயாய்ப் பேயாய்
இராணுவ முகாம்களிலும் அகதி முகாம்களிலும்
தவிக்குமெம் குலத்தைப் பார்!

தாயையும் தாயகத்தையும் அன்னியனிடம்......
நானும் வந்திருந்தால்
உன்னைப்போல் வாழ்வேன் என்பாயா....?
டேய்.....
இழப்போடும் இறப்போடும்
நொந்து வெந்து துன்பப்படும் எம்மைப் பார்!
கையிழந்து காதிழந்து கண்ணிழந்து காலிழந்து
அங்கவீனர்களாய்ப் பல்லாயிரம் பேர்.......
இவர்களையெல்லாம் சாட்சிவைத்து வாழும்
இந்த வாழ்க்கை உனக்கு தேவைதானா...?

மனிதாபிமானம், மனித உரிமை, சுதந்திரம்
பந்தபாசம், தேசிய உணர்வு, காருண்யம்
இவற்றோடும் வாழ்வதுதான் மனித வாழ்க்கை
நீ வாழுகின்ற வாழ்க்கை விலங்கின வாழ்க்கைக்கு
சமனடா.....

அம்மா அதோ...அன்னம்மாள் ஆலய முகாமில்
பெரியக்கா அதோ...பிள்ளையார் கோவில் முகாமில்
சின்னக்கா.....?
பெரிய மாமாவை இன்னும் காணவில்லை!
பெரிய மாமாவின் மக்கள் வாளாவெட்டிகளாய்...
முன் வீட்டு முத்தரின் பிணம்
வாழைத் தோட்டத்தில் மணத்துக்கொண்டே கிடக்கு!
தாத்தாவின் எலும்புக்கூடு
இன்னும் மண் மறையவில்லை!
கல்வீட்டு கந்தையாவின் மண்டையோட்டை
பேரர்மார் விளையாடிக்கொண்டிருக்கிறார்கள்!

நன்றி — ஈழநிதி —

www.tamilarangam.net



# அமைதி ஜனநாயகம்?

1988-மார்கழி மாதத்தில் மாத்திரம் இந்திய இராணுவ பாதுகாவலில் செயல்படும் E.P.R.L.F கைக்கூலிக் காடையர்களால் படுகொலை செய்யப்பட்ட எமது தேசத்தை நேசித்த தமிழ் பிரமுகர்கள் சிலரின் விபரம்

| | | |
|---|---|---|
| ஜெயக்குமார் | ---- | ஏழாலை |
| கணேஸ் | ---- | யாழ்ப்பாணம் |
| சின்னத்துரை குணரத்தினம் | ---- | பளை |
| தம்பிப்பிள்ளை சிவம் | ---- | சாவகச்சேரி |
| கருணைநந்தம் சிவம் | ---- | காங்கேசந்துறை |
| வைரமுத்து சின்னச்சி | ---- | *** |
| குமாரசாமி | ---- | கொக்குவில் |
| கந்தையா அரசகோன் | ---- | பெரியவிளான் |
| செல்லத்தம்பி செல்வானந்தம் | — | கந்தர்மடம் |
| முகுந்தன் | ---- | தையிலிட்டி |
| காதர் | ---- | *** |
| பெனைன்டோ | ---- | அளவெட்டி |
| தவஞானம் | ---- | கல்லியங்காடு |
| அருள்ஞானம் | ---- | கல்லியங்காடு |
| இரவீந்திரம் | ---- | சுளிபுரம் |
| சாந்தகுமார் | ---- | கிளிநொச்சி |
| கனகராஜன் | ---- | கிளிநொச்சி |
| சந்திரன் | ---- | காங்கேசந்துறை |

இவர்கள் எமது தேச விடுதலையை நேசித்தார்கள்! அதனால் துரோகிகளால் இவர்களுக்கு மரணம் பரிசாக வழங்கப்பட்டது!

www.tamilarangam.net



**COMITE DE COORDINATION TAMOUL - FRANCE**

**தமிழர் ஒருங்கிணைப்புக் குழு_பிரான்ஸ்**

**TAMIL CO-ORDINATING COMMITTEE - FRANCE**

# மகளிர் பிரிவு

14.2.88

ஈழத்தமிழ் பேசும் மக்களின் தேசியவிடுதலைக்கான போராட்டத்தின் வளர்ச்சி அதனை மகோன்னதமான வெகுஜன வடிவம் பெற்று வரும் இன்றைய வேளையில் சமூகத்தின் பெரும்பான்மையாகத் திகழும் பெண்களின் போராட்டப் பங்களிப்பு உயிர்த்துடிப்புள்ளதாக திகழுகின்றது.

இன அடக்குமுறை-சமூக அடக்குமுறை-ஆண் ஆதிக்கம் என்பன தந்த அடக்குமுறை அனுபவங்களுடன் ஈழத்தமிழ்ப் பெண்கள் இயந்திரமாய் அடிமைகளாய் வாழ்ந்த காலங்களை கடந்தகாலங்களாய் ஆக்கிவிட்டு ஈழத்துத்தமிழ்ப்பெண்கள் துப்பாக்கிகளுடன் ஒளிமயமான எதிர்காலம் படைக்கப் புறப்பட்டுவிட்டனர்.

இந்த விழிப்புணர்வும்,புரட்சிகர உணர்வும் சுதந்திரத் தமிழீழத்தில் வாழவிரும்பும் அனைத்துப் பெண்களுக்கும் உரியது.

ஈழத்துப் போர்க்களத்தில் புதுவிதி செய்யப்போராடும் பெண்களின் ஆக்ரோசம் அன்னிய மண்களில் அகதிகளாய் வாழுகின்ற எம் உள்ளங்களில் பிரதிபலிக்கட்டும்! செயல்பாடுகளில் வெளிப்படட்டும்!

"பெண்விடுதலை" என்பது சமூக-அரசியல் நோக்கற்ற கவர்ச்சிகர மேடைப்பேச்சுகளாலோ,வண்ண வண்ண புத்தக வெளியீட்டுகள்மூலமோ கிடைப்பதல்ல! மாறாக எரிகின்ற பிரச்சனைகளுடன் அதாவது யதார்த்த உலகில் சமூக-அரசியல் பார்வைகளுடன் பெண்கள் பங்கு பற்றும் போராட்டங்களே உண்மையான விடுதலைக்கு வழி வகுக்கும்.

அந்த அர்த்தபுஸ்டியுள்ள உண்மையின் அடிப்படையில் பிரான்சில் வாழும் ஈழத்தமிழ்ப் பெண்களின் அமைப்பாக இம்மகளிர் அமைப்பு உருப்பெறுகின்றது. இங்கு வாழும் பெண் சமூகத்தின் விழிப்பிற்கும்-போராட்டப் பங்களிப்புகளுக்கும் இம்மகளிர் அமைப்பு வழி திறக்கும்.

பெண்ணே!

சமூக விடுதலைக்கான உனது பங்கை தீர்மானி;அதன்பொழுதுதான் உனது விடுதலைக்கான அளவும் தீர்மானிக்கப்படுகின்றது!

Siège Social : 341, rue des Pyrénées - 75020 PARIS
Téléphone : 43 58 11 42

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இரத்த சாட்சிகளே...!



இரத்த சாட்சிகளே
உங்களுக்கு வாழ்த்துக்கள்!
உண்மைக்காக உயிர் பலி தந்த
நீங்கள்— வெற்றிபெற்றுவிட்டீர்கள்!
உங்களைப் பாலூட்டி வளர்த்த
தாய்மார்களும்
வெற்றி பெற்று விட்டார்கள்...!
இரத்தசாட்சிகளின் கிரீடத்தை
நெற்றியில் சூடிக்கொண்ட
உங்களுக்கு வாழ்த்துக்கள்...!
மரணத் தருவாயிலும்
துடிக்கும் உதடுகளால்
போர்கோஷங்களை
உச்சரித்துக் கொண்டிருந்த
உங்களுக்கு வாழ்த்துக்கள்!
எங்கள் தலைக்குமேல்
விசிப்பறந்து
எங்கள் காதுகளில்
பழிவாங்குங்கள் என்று—
ஓதிக்கொண்டிருக்கும்
உங்களுக்கு வாழ்த்துக்கள்!...

வெளியீடு :-

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
341, RUE DES PYRENEES,
75020 PARIS .